9.137

# மாவை-கிளானை ஞானவைரவர் ஆலயம்



# கும்பாபிஷேக மலர்

வெளியீடு: பரிபாலன சபை

21-6-1988

உ

# மாவை - இளாளை ஞானவைரவர் ஆலயம்

★

# கும்பாபிஷேக மலர்

★

தொகுப்பாசிரியர் :

திரு. க. துரைரத்தினம் ஆசிரியர்

★

கும்பாபிஷேக தினம் :

29-04-1988

விபவ ஆண்டு சித்திரைத்திங்கள் 17-ம் நாள் வெள்ளிக்கிழமை

★

மலர் வெளியீடு :

பரிபாலன சபை

21-06-1988

விபவ ஆண்டு ஆனித்திங்கள் 7-ம் நாள் செவ்வாய்க்கிழமை

## கும்பாபிஷேக அலங்கார
## உற்சவ உபயகாரர்கள்

### கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம்
திரு. வை. சண்முகலிங்கம்

### அலங்கார உற்சவங்கள்

நிரந்தர உபயகாரர்கள்

சின்னத்தம்பி குடும்பத்தினர்
மூத்ததம்பி குடும்பத்தினர்
திரு. க. கந்தசாமி
,, வே. மூத்ததம்பி
,, சி. சிவராசா
,, வ. காசிநாதன்
வயிரமுத்து குடும்பத்தினர்
திரு. வ. சின்னத்தம்பி
குருநாதர் குடும்பத்தினர்
திரு. வே. கதிரவேலு
,, வ. சின்னக்கண்டர்
,, ச. குணரத்தினம்

மேலதிக உபயகாரர்கள்

திரு. பொ. நவரத்தினம்
,, வ. சிறிதரன்
,, க. சாவிணக்குட்டி
,, மு. பாலசுப்பிரமணியம்
,, தா. சிவகுரு
,, சி. நாகராசா
,, வ. சீனியர்
தி. பாலசுப்பிரமணியம்.

,, க. சின்னத்தம்பு
திரு. வ. இராசதுரை
,, ஆ. கணேசலிங்கம்
,, இ. சோமசுந்தரம்
,, சி. விசாகேசன்
,, சி. கணேசு
,, வை. சோமசுந்தரம்
,, க. கணேசமூர்த்தி
,, வெ. செல்வரத்தினம்
,, மு. பரசலிங்கம்
,, சி. காமாட்சிசுந்தரம்
,, சு. திருக்கேதீஸ்வரன்
திருமதி த. சுப்பிரமணியம்
,, த. சின்னத்தம்பி
,, சு. நடேசன்
,, வ. முருகையா
இளைஞர்கள்
திரு. ச. பொன்னம்பலம்
,, ந. கனகரத்தினம்
,, க. அருள்ராசா
சின்னத்துரை குடும்பத்தினர்
திரு. ச. இராசையா
க. சிவானந்தம்.

உ

# முகவுரை

அண்மைக் காலங்களில் நிகழ்ந்த அசம்பாவிதங்களினுல் அழகிய அருள்மிகு ஆலயங்கள் பலவும் தரைமட்டமாகத் தகர்க்கப்பட்டுள்ளன. அநேக ஆலயங்களில் புணருத்தாரணப் பணி மேற்கொள்ளப்பட்டுக் குடமுழுக்கு, கும்பாபிஷேகங்கள் நடைபெற்று வருகின்றன. வசதிபடைத்த பல பெரியோர்கள் தம்மைக் காத்தருளிய இறைவன்பால் பக்தி மிகக்கொண்டு பல திருப்பணிகளை நிறைவேற்றி வருகின்றனர். மாவை கிளானையில் எழுந்தருளியிருக்கும் ஞானவைரவர் ஆலயத்தில் நிறைவெய்திய திருப்பணியை, அடுத்து நிகழ்ந்த கும்பாபிஷேகத்தின் சிறப்பை நினைவுகூரும் வகையில் மலர்ந்ததே இந்த "மாவை கிளானை ஞானவைரவர் ஆலயக் கும்பாபிஷேகச் சிறப்பு மலர்" ஆகும்.

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்திற்கும் எமது ஆலயத்திற்கும் இடையில் பண்டுதொட்டு நெருங்கிய தொடர்பு இருந்து வருகின்றது. கீரிமலை நகுலேஸ்வர ஆதீனம் கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள் "மாவை கிளானை வைரவர் ஸ்வாமி கோயில்" என்ற தலைப்பில் ஆசியுரை வழங்கி இம்மலரைச் சிறப்பித்துள்ளார். மாவை ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் அனுட்டிக்கப்படும் பூசைமுறைகளையொட்டி இவ்வாலயத்திலும் பாரம்பரியங்கள் பேணப்பட்டு வருகின்றன. மாவை ஆதீனம் மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களின் ஆசியுரை இடம்பெறுவது மலருக்கு மேலும் மெருகூட்டுகின்றது. ஸ்ரீ மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சு. சிவஷண்முகானந்தக் குருக்கள் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் அகில இலங்கையில் மட்டுமல்ல, கடல்கடந்த நாடுகளிலும் பிரசித்தி பெறத் துணைநிற்கும் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் "வைரவப் பெருமான்" என்ற தலைப்பிலான வாழ்த்துரையை வழங்கி மலரைச் சிறப்பித்துள்ளார்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சி சிவமகாராசா அவர்கள் எம்மூருடன் நெருங்கிய தொடர்புடையவர்; எம்மூரவர் என்றே சொல்லலாம். இளமைக் காலத்தில் எமது சனசமூகநிலையச் செயலாளராகப் பணிபுரிந்து எல்லோரினதும் பேரன்பைப் பெற்றவர். "காவற் தெய்வத்தைக் கைதொழுவோம்" என்று தெவிட்டாத தீந்தமிழில் வழங்கிய வாழ்த்துரை இம்மலருக்குச் சுவையூட்டுகின்றது.

அகில இலங்கை வீரசைவகுருமஹா சந்நிதானம் ஸ்ரீ ரேணுகாச்சிரம பட்டத்தரசு சிவஸ்ரீ இ. உருத்திரபுரேஸ்வரக் குருக்கள் அவர்களால் சிறப்பான முறையில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு முழுமண்டலமாக அலங்கார உற்சவங்கள் நிறைவடைந்துள்ளன. கும்பாபிஷேகத்தை நிறைவேற்றிய குருக்கள் அவர்களால் கும்பாபிஷேக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதால் கும்பாபிஷேகம் காண்பதன் பயனைக் கண்டவர்கள் அறியக்கூடியதாக இருக்கின்றது.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர், சைவப் புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்கள் எமது ஆலயத்துடன் மிக நெருங்கிய தொடர்புடைய அன்பராவார். ஆண்டுதோறும் நடைபெறும் அலங்கார உற்சவங்களின்போது வருகைதந்து அரும்பெருங்

கருத்துக்கள் பொதிந்த சைவநெறியினை ஆறிலிருந்து அறுபதுவரை விளங்கும்வண்ணம் சுவை நிறைந்த சிறுசிறு கதைகள்மூலம் எடுத்துச் சொல்வதில் வல்லவர். அவர்களின் ''சைவ வழிபாடுகளும் தொண்டுகளும்'' என்ற கட்டுரையை வாசிக்கும்போது தேன்கலந்த பஞ்சாமிர்தம் சுவைப்பது போன்ற நிறைவு ஏற்படுகின்றது.

எமது ஆலய பரிபாலன சபையின் ஆரம்பகாலச் செயலாளராகப் பணியாற்றிய திரு. மூ மார்க்கண்டு ஆசிரியர் அவர்களின் வாழ்த்துரை இடம்பெறுவது மலருக்கு மணமூட்டுகின்றது. பரிபாலன சபையின் ஆரம்பகாலப் பொருளாளராகவும், பின் செயலாளராகவும் பலகாலம் எம்முடன் பணியாற்றிய ஆசிரியர் திரு. க. துரைரத்தினம் அவர்கள் எமது ஆலய வரலாற்றினை வடிவமைத்துத் தந்துள்ளார். ஆலய வரலாற்றுடன் அவ்வக்காலங்களில் ஆலய வளர்ச்சிக்காக அரும்பணியாற்றிய தொண்டர்களின் பணியையும் தொகுத்துத் தந்துள்ளமையால் மலர் பொலிவடைகின்றது.

பொங்கல் நன்னாளிற் பொங்கி மலரும் கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரை வழங்கிய ஆதீனகர்த்தாக்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய சைவப் பெரியோர்களுக்கும், கட்டுரைகள் வழங்கிய அன்பர்களுக்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எம்பெருமானுக்குக் கும்பாபிஷேகம் கண்டு தொடர்ந்து முழுமண்டலமாக அலங்கார உற்சவங்கள் செய்த அன்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இம்மலர் மலர்வதற்குக் காரணகர்த்தாக்களாக விளங்கும் பரிபாலனசபையின் சக உறுப்பினர்களுக்கும், மலர்க்குழுவினர்க்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூ. நடராசா
தலைவர், பரிபாலனசபை.

# மாவை கிளானை பைரவர் ஸ்வாமி கோயில்

கு. நகுலேஸ்வரக்குருக்கள்

தலவிருட்சத்தின் கீழ் எழுந்தருளிப் பல ஆண்டுகளாக பைரவ சுவாமி மாவை கிளானைக் கிராமத்தில் அருள்பாலித்து வந்துள்ளார். சைவப்பெருமக்கள் பன்னெடுங்காலமாகப் பொங்கல், குளிர்த்தி போன்ற பக்தி நெறிகளில் நின்று பைரவ சுவாமியை ஆராதித்து வந்துள்ளனர்.

1944 ஆம் ஆண்டில் திருவாளர் சு. சின்னத்தம்பி (சாணையர்) அவர்களும் ஏனைய சைவ அன்பர்களும், எமது தந்தையாரைக் கொண்டு, ஆலய நிர்மாணத்துக்காக நிலம் வகுத்தனர். இதன்பின் இவ்வாலயம் நித்திய பூசைகள் விழாக்கள் முதலியன சாஸ்திரோக்தமாக நடைபெற்று வளர்ச்சியுற்றது பைரவ சுவாமி காவல் தெய்வமாக இருந்து இக் கிராமத்தையும், அயற் கிராமங்களையும் பரிபாலித்து வருகின்றார்

இவ்வாலயத்தின் பூசகர்களும் பயபக்தியுடன் பைரவ சுவாமியை உபாசனை செய்து ஆராதனையால் திருவேற்றிக் கிராம மக்களுக்கு நலம்பெற உழைத்து வருகின்றனர்

இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய ஆலோசனைகளை அவ்வப்போது நகுலேஸ்வர ஆதீனம் வழங்கி வருவது யாவரும் அறிந்ததே. இதனால் கிளானை பைரவ சுவாமி கோயிலுக்கும், நகுலேஸ்வர தேவஸ்தானத்துக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுவதாயிற்று.

இக்கோயிலில் பலிபீடம் அமைக்கப்பட்டதுடன் பிரகாரத்தில் விநாயகர் ஆலயமும் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிகழ்ந்துள்ளது. இக் கோவிலின் வளர்ச்சிக்கும் பெரிதும் உபகரித்து நன்நெறி நிற்கும் தர்மவள்ளல் திருவாளர் வை. ஷண்முகலிங்கம் அவர்களும், பரிபாலன சபையாரும் மற்றும் பல பக்தர்களும் இணைந்து செயற்பட்டு வருவது மகிழ்விற்குரியது. இவ்வாறு காலந்தோறும் வேண்டிய திருப்பணிகளைச் செய்ய எல்லாம் வல்ல எம்பெருமான் அருள் இவர்களுக்குக் கிடைப்பதாகுக.

பைரவ சுவாமி சிவபிரானின் மூர்த்தங்களுள் சிறப்புமிக்கவர். இவர் சைவ அன்பர்களை பிரத்தியாட்சமாக நின்று காத்தற்காகவே க்ஷேத்திர பாலகராக எழுந்தருளியுள்ளார், இவருக்கு வேண்டிய நித்திய நைமித்திய பூசைகள் தடையின்றிச் சிறப்பாக நடைபெறவேண்டுமென்ற பெருவிருப்புடன் எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

நகுலேஸ்வர ஆதீனம்,
நகுலேஸ்வரம்.

கு. நகுலேஸ்வரக்குருக்கள்

உ

சிவமயம்

## மாவிட்டபுரம் மாவையாதீனகர்த்தா
## மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் அவர்களின்
# வாழ்த்துரை

"ஆலயம் என்பது எல்லாம் ஒடுங்குமிடம் எனப் பொருள்கூடும்" மந்திர பூர்வமாக ஸ்தாபிக்கப்பட்ட வடிவங்களில் வெளிப்பட்டு ஆன்மாக்களுக்கு அருள்புரியுமிடம் ஆலயமானதால், ஆன்மாக்களும் ஆணவமலவலி ஒடுங்கப் பெற்று பேரன்புடன் மனம் வாக்கு காயமெனும் மூக்கரணங்களாலும் முறையே சிந்தித்து வாழ்த்தி வணங்கி அருள்ஞானமடைந்து இறைவனிடம் ஒடுங்குவதற் கேற்ற சாதனைகளைச் செய்யவேண்டும்.

ஆலய அமைப்பே கர்ஷணம். அதனுள்ளிருக்கும் பிம்பத்தில் மந்திரசக்தியால் சான்னித்யம் செய்தலே பிரதிஷ்டை. இந்தப் பிம்பத்திற்கு விசேஷ வழிபாடு விழா செய்தலே உத்ஸவம். கிரியைகளில் தெரிந்தும் தெரியாமலும் செய்யப்பெற்ற குற்றங்களை நீக்கிப் பரிகாரம் செய்தலே பிராயச்சித்தமாகும். கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தி எனச் சைவநூல்கள் துணிந்துகூறுகின்றன

கிராமங்கள்தோறும் சைவர்கள் தத்தமக்கு வேண்டிய சுவாமிகளைப் பிரதிஷ்டைசெய்து, தாம்தாம் விரும்பிய பிரகாரம் வழிபாடு செய்வது வழக்கமாயிற்று.

பொங்கல் பொங்கியும், மிருகபலியிட்டும், தீமிதித்தும், காவடி கரகங்கள் காவியும், அங்கப்பிரதிஷ்டை செய்தும் தாம்தாம் விரும்பியபடி வழிபாடு இயற்றும் மனிதர்கள், கிராமக் கோவில்களைத் துணையாகக்கொண்டு வாழ்வியலை நன்றாகவே சீராக்கினர் என வரலாறு கூறுகிறது. காலம் செல்லச் செல்ல இவ் வழிபாட்டு முறைகளும் நவீனம்பெற்று ஆலயங்கள் யாவும் வியாபாரத் தன்மைக்குள் ஆழ்ந்து. பலவீனம் பெற்று, உலகிற்கே தீங்கு பயப்பனவாக அமைகின்றன. மனிதரைத் தேவர்கள் என்றும், தேவர்களை மும்மூர்த்திகள் என்றும், பிரம்மா விஷ்ணுக்களைப் பரம்பொருள் என்றும், பூசாரிகள் துணிந்து கூறுகிறார்கள். இவை உண்மையல்ல என்பதனை சூரமகாசுரனுக்கு வீரவாகுவே எடுத்துக் கூறுகிறார்.

மானு டத்தாரைத் தேவென்பர் வானகத்தவரை
ஏனை முத்தொழி லவரென்பர் இருவர்தங்களையும்
நானி லத்தினிற் பரம்பொருள் இவரெனநவில்வார்
ஆன சொற்றிறம் முகமனே சரதமற்றன்றால்.

(கந்தபுராணம்)

இப்போ கலியுகம். யாரும் எதையும் செய்யலாம். கால்முறிந்த நொண்டியானவன் சிகிச்சைபெற்று ஊன்றுகோல் துணையுடன் நொண்டி நொண்டி நடந்தாலும் அவன் முடவனேதான் என அறிஞர் கூறுவர். ஆனால் மூடரோவெனில், "அதோ எப்படியோ நடக்கிருனே அவன் முடவனல்ல" எனக் கூறுகிருன்.

எது சரி, எது பிழையெனத் தீர்மானிப்பதற்குப் பகிரங்க விவாதங்களையும் நடாத்துகிருர்கள். விவாதங்களுக்கு நடுநிலைமை கொண்ட நீதிபதிகள் கிடையாது. இப்படித்தான் இக்காலங்களில் நடைபெறும் வாழ்வியல்புகள். இந்த நேரத்திலே, கிளாலைக் கிராமமக்கள் தங்களது மூன்னேரது வயிரவர் ஆலயத்தைச் சீராக்கி, பேணிவளர்த்து கும்பாபிஷேகமும் செய்து, உத்சவாதிகளையும் நடாத்தி முக்தியின்ப வாழ்விற்கு முயலுகிருர்கள். இதுவே சிறந்த தர்மமாகும்.

நிர்வாண கோலத்துடனும் செந்தாமரை மலரின் இதழ்போன்ற விசாலமான கண்களையுடையவரும், விபூதியினைப் பூசிய மெய்ப்பூச்சினையுடையவரும், எவரும் சரணம்புகுதற்கேற்புடையவரும், சகல பொருட் பேறுகளையும் கருணையினுல் தரவல்லராகிய கிளாலை வயிரவசுவாமியின் அனுக்கிரகம் எங்கும் சொரிக என இத்தால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

மஹாராஜஸ்ரீ ச. து. ஷண்முகநாதக் குருக்கள்
மாவையாதீனகர்த்தா

ௐ

ஸ்ரீ மாவை விநாயகர் துணை

# சிவஸ்ரீ சு. சிவஷண்முகானந்தக்குருக்கள் அவர்களின்

# வாழ்த்துரை

மாவிட்டபுரம் - கிளாலி ஞானபைரவர் ஆலய குடமுழுக்கு விழா நடைபெற்று மண்டலாபிஷேகமும் சிறப்பாக நடந்தேறி நாற்பத்தைந்தாம் நாள் மண்டலபூர்த்தியாகி இன்று (12-06-88) மண்டலாபிஷேக் சங்காபிஷேகம் நடைபெறுகின்றது. இவ்வேளையில் நம் நெஞ்சினிருந்து என்றும் நீங்காமல் திருவருள் பாலிக்குமாறு அவ்விறைவனை இறைஞ்சுவோமாக

அண்மையில் நடைபெற்ற வன் செயல்களால் மக்கள் பாதிக்கப்பட்டதுமல்லாது அவர்கள் வணங்கும் திருக்கோவில்களும் பாதிப்புக்கு இலக்காகின. இதைச்சிந்திக்கும் பொழுது இறைவனுக்குச் செய்யும் சிறந்த பூசையில் ஏதும் குறைபாடு நேர்ந்ததோ, அல்லது நீதி நெறிப்பட்ட தபோதனர்கள் மனம் புழுங்க தீமையை யாம் இழைத்தோமோ என்ற நிலைமைக்குத்தள்ளப்படுகின்றோம். எல்லாவற்றிற்கும் காரணர்கள் நாம்தாம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். எது எவ்வாறாயினும் குருவை மதித்து பக்தியுடனும் அசைவற்ற நம்பிக்கையுடனும் இறைவனை வணங்கினால் அவன் வேண்டுவனவெல்லாம் தந்தருள்வான். நாமும் ஈடேறுவோம்.

இன்று அநேகர் போலி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அபிஷேகம் செய்யும் திரவியங்கள் கூடக் கலப்புப் பொருட்களால் போலிப் பொருள்களாகக் கணிக்கப்படும் நிலைக்கு வந்துவிட்டன. இவ்வாறு மலிவு விற்பனைக்குக் கிடைக்கும் பொருட்களை வாங்கி அபிஷேகம் செய்வதைவிடக் கிணற்று நீரைவடிகட்டிச் சுத்தமான பசும்பால், தயிர், பசுநெய் சேர்த்து அபிஷேகம் செய்தாலே போதுமானது என்று எண்ணக்கூடியதாய் இருக்கிறது. இதைவிட மோசமான மந்திரம், பூசை முறை தெரியாத குருமார் பூசிப்பதும் தாளம் சுரம் தெரியாத வாத்தியங்கள் கோவில்களில் இசைப்பதுமாகும். எது நாம் மலிவு என்று செய்கின்றோமோ அவ்வாறே இறைவனு் மலிவான திருவருளைச் சுரக்கின்றான். எனவே நாங்கள் ஆண்டவனுக்குத் தூய்மையான நல்ல பொருட்களை அர்ப்பணித்து மெய்யன்புடன் வழிபட்டால் எமது பக்குவ நிலைக்கேற்பத் திருவருள் கிடைக்கும்.

கிளாலி ஞான பைரவப் பெருமான் ஒரு நடமாடும் தெய்வம்; யார் பக்தியுடன் வழிபட்டாலும் அங்கு வடையின் மணத்தோடு வருவான். பக்தியுடன் வணங்கும் கிளாலி வாழ் மக்களே இதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றனர். பைரவப் பெருமானை தொடர்ந்து ஒருவருடத்திற்காவது குறையாமல் மனமாரவணங்கி அட்டசித்திகளையும் பலர் பெற்றனரெனில் அது மிகையாகாது.

பிரமாவின் தலையை மாலையாக ஒவ்வொரு கற்பகாலத்திலும் ஒவ்வொரு தலையாக அனேக கற்பகாலங்களில் சேர்த்து மாலையாக அணிந்திருக்கின்றார் என்பதைக் காட்டவே பைரவப் பெருமானுக்கு வடைமாலை சாத்துகிறோம். ''எனது ஆணவம் அடங்கியது உன்னை சரண் அடைகிறேன்'' என்று எமது தலையையே கொடுப்பதாகக்கருதி வடைமாலை சாத்துவது வழக்கம். சமஸ்கிருதத்தில் ''மாஷாபூபம்'' என்று கூறுவர்.

அனுக்கிரகத் தெய்வமான ஸ்ரீவைரவப் பெருமான் மாவிட்டபுரம் - கிளாலைப்பகுதியில் எழுந்தருளியிருக்கின்றார். சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக்குருக்கள் அவர்கள் செய்த பெரும் சாந்தியின் பயனால் இவ்வாலயம் வளர்ச்சியடைந்து தற்போது மீண்டும் அவரின் பேரனாகிய சிவஸ்ரீ வ உருத்திரபுவரக் கு க்களவர்கள் தற்போது சம்புரோட்சண மகா கும்பாபிஷேகம் செய்துள்ளார். அவர் ஆரம்பகாலத்தில் [redacted] இந்தியா சென்று விஷேட பயிற்சி பெற்று இங்குவந்து பேரனாரிடம் ஆசாரியாபிஷேகம் பெற்றுக் குருக்களாக இருக்கிறார். இவரின் கிரியை முறைகள் எல்லோராலும் போற்றப் படுவதாய் மனச்சாந்தியை கொடுக்கும் ஒன்றாய் அமைந்துள்ளது.

ஆலயத் திருப்பணி வேலைகள் ஊர்மக்களின் ஒத்துழைப்புடன் பரிபாலனசபையினரின் ஊக்குவிப்பால் இனிது நிறைவேறியுள்ளது. மேலும் பல திருப்பணிகள் நிறைவேற [redacted] எல்லாம் வல்ல கிளாலை ஞானவயிரவப் பெருமானை அபரிதமாகப் பிரார்த்திக்கின்றேன்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**ஸ்ரீலஸ்ரீ சு. சிவசண்முகானந்தக் குருக்கள்**
ஸ்ரீ மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தினதும்
ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர சுவாமி திருக்கோயிலினதும்
யாழ் வண்ணை கிழக்கு ஸ்ரீ வீரமாகாளி கோயிலினதும்
ஆதீனகர்த்தாவும் பிரதம குருவும்

# வைரவப் பெருமானை வாழ்த்தி வணங்குவோம்

**தங்கம்மா அப்பாக்குட்டி**

"பரமனை மதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்."

யாழ்ப்பாணத்துச் சைவத்தமிழ் மக்களுக்கு வைரவ வழிபாட்டிலே' மிக ஈடுபாடு உண்டு. கொட்டிலிலும், தொட்டிலிலும், சந்தியிலும், சாவடியிலும் ஒரு சிறிய சூலத்தையாவது வைத்து வழிபட்டு ஆண்டுதோறும் பொங்கலிட்டுப் பூசிப்பதும் எல்லோராலும் அறியப் பட்டதொன்று. இன்னும் மேலாக ஒரு பகுதியினர் வைரவப் பெருமானைக் குல தெய்வ மாகப் போற்றிக் கோயில் கட்டிக் குடமுழுக்காட்டி உற்சவங்கள் நடாத்தி மகிழ்வதையும் நாம் காண்கிறோம். இத்தகைய பக்தி மேம்பாட்டில் திளைத்தவர்களுடைய ஒரு திருக் கோயிலாக விளங்குவது கிளானை வைரவர் கோயிலாகும். இது கொல்லங்கலட்டியில் அமைந்துள்ளது. மிகச் சிறந்த சைவப்பண்பாடுள்ள குடும்பங்களால் இவ்வாலயம் பரிபாலிக் கப்பட்டு வருகிறது. சமீபத்தில் இங்கு குடமுழுக்கு விழா நடைபெற்றது. இதனால் மேன் மேலும் வைரவபக்தி இவ்வூர்மக்கள் மத்தியில் எழுச்சி பெற்றுள்ளது.

வைரவப் பெருமானின் அவதாரம் அற்புதமானது. முருக அவதாரம் போன்ற மகிமை வாய்ந்தது. அதாவது மகாமேரு மலையில் வீற்றிருந்த சமயம் தேவர்கள் ஒன்று கூடி அங்கு சென்று வணங்கினார்கள் ஆதியும் அந்தமுமில்லா முழுமுதலாக விளங்குபவர் யாவர்? என்று வினவிநின்றார்கள் உடனே சட்டென்று பிரமதேவர் எழுந்து தானே முழுமுதற் தலைவர் என்று துணிந்து சொன்னார். மகாவிஷ்ணு மூர்த்தியும் அகந்தை மேலிட்டு தானே பிரம்மம் என்று வாதாடினார். திருவருளை உதறித் தள்ளி விட்டு அறிவும் பொருளும் தமக்கே உலகில் முதன்மையுண்டு என்று இவ்வுலகில் வாதிடுவது போல் இவை அமைந்தன. ஆனால் வேதங்களும் பிரணவமும் முழுமுதல் சிவனேயென்று வெளிப்பட்டு உணர்த்திய போதும் பிரம விட்டுணுக்களுக்கு அகந்தை நீங்கவில்லை. இதனை நீக்கற்பொருட்டு இறைவன் சோதிவடிவில் இவர்கள் நடுவில் தோன்றினார். மேலும் அகந்தை நிலையை அகற்ற வேண்டி அம்மை அப்பனாகக் கயிலையில் இருந்தருளும் கோலத்தைக்காட்டியருளினார். உடனே நாராயண மூர்த்திக்கு நல்லறிவுதோன்றலும் எழுந்து எம்பெருமானை வணங்கினார். ஆனால் பிரம்ம தேவர் அகந்தை நீங்காதவராய் தனது உச்சித்தலையில் அமைந்த வாயினால் நிந்தனை வார்த்தைகளைக் கூறிச் சிவனைப் பரிகாசஞ் செய்தார்.

இச் சர்ந்தர்ப்பத்திலேயே எம்பெருமான் வைரவக் கடவுளைத் தோற்றுவித்து பிரம்ம தேவரின் அகந்தையை மாற்றத் திருவுளங் கொண்டார்.

"நீறுறு சுடரின் மெய்யும் நெருகிழிகள் அகற்றும் தாளும்
ஆலமதுயிர்க்கும் செங்கேழ் அரவவெற்றரையுஞ் சென்னி
மலைகள் அனந்தகோடி வயின் வயின் பெயரும் மார்புஞ்
சூலமும் பரசும் காணும் துடியும் ஏந்திய பொற் தோளும்."

இவ்வாறு வைபிரவ தோற்றத்தைக் கந்தபுராணம் எடுத்துக்காட்டுகிறது. மேலும் உக்கிர மூர்த்தியாகக் காட்சியளித்த வைரவப் பெருமானை நோக்கி எம்பெருமான் பின்வருமாறு மொழிகிறார்.

"மகனே உச்சித்தலையால் எம்மை இகழ்ந்திடும் பிரம்மனுடைய அந்தத் தலையைக் கிள்ளி உன்கரத்தில் ஏந்திக் கொண்டு பின்பு பிரமனுக்கு உயிர்ப்பிச்சை வழங்கிவிட்டு அண்டங்களெங்கும் முனிவர்கள், தேவர்கள் போற்ற உலவுவாயாக". இதனை ஏற்றுக் கொண்ட வயிரவமூர்த்தி தேவர்கள் மூவர்களின் அகந்தையைப் போக்கி தமக்களித்தமுதிய மூலபதவியை ஏற்றுக்கொண்டு பிரம்மதேவரின் உச்சித்தலையைக் கொய்து அவரடைந்த அகந்தையையும் மாற்றியருளினர். உடனே பிரம்மதேவன் விழிப்புணர்வு பெற்றுத் தன்னைத் தண்டித்துப் பிழைகளை மன்னித்துத் தூய நிலையைத் தந்தருளிய வயிரவப் பெருமானை வாயாரப் போற்றினர்.

வயிரவ மூர்த்தியானவர் அண்டங்கள் தோறும் வேதங்களாகிய நாய் வாகனத்தில் எழுந்தருளிக் காவல் புரிந்து வினைகளையும் பாவங்களையும் அகந்தையையும் மமதையையும் பொடியாக்கி உலாவி வருபவர் என்பதையும் அவரே பிரளய காலத்தில் பெருஞ்சுடலையின் எல்லையிலும் காட்சி தந்து உலாவி வருபவர் என்பதையும் எமது உள்ளத்திலிருத்திக் கொள்ள வேண்டும். அவர் பூரண இன்ப வடிவானவர். அவர் ஆடும் ஆட்டமெல்லாம் சிவனது ஆடல்களே என்பது உண்மைக் கருத்தாகும். இவரை வழிபடுவதால் கடன் தொல்லை, பகை, சிறைச்சாலைத் துன்பம், பிணி, நீதிமன்றத் தொல்லை, களவு முதலிய கஷ்டங்கள் நீங்கி சுமுகமான வாழ்வு வாழ வழிபிறக்கும் என்பது அருளாளரும் அனுபவம் பெற்றோரும் எடுத்துக் கூறும் உறுதி மொழிகளாகும்.

வயிரவப் பெருமான் திருவடிகள் வாழ்க.

தங்கம்மா அப்பாக்குட்டி J. P.
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

# காவற்தெய்வத்தைக் கைதொழுவோம்

சி. சிவமகாராசா

மேன்மை கொள் சைவம் மேதினியிற் தொன்மையாற் பெருமை பெற்றது; தத்துவச்செழிப்பு மிக்கது. அன்பு நெறியால் அகிலத்தே தழைத்து நிற்பது இந்த ஒப்பரும் மதத்தினராய நம்மவர் அந்நெறியிலே நம்பிக்கையுடன் பிறழாதுநிற்பவர் ஆன்மாக்கள் லயப்படும் இடங்களான ஆலயங்களைச் சுற்றித்தம் வாழ்வியலை அமைத்துக் கொண்டார்கள். கோயிலில்லா ஊரிற் குடியிருக்க விரும்பாதவர்கள் தென்னாட்டுப்பக்திப் பெருவெள்ளம் பாய்ந்தோடிக்கொண்டிருந்த அந்தக்காலகட்டத்தே ஆலயங்கள் முக்கியத்துவம் பெற்றன. தமிழோடிசைபாடிய அடியார்கள் சைவத்தின் மேன்மையை மேலும் வளர்த்துக்கொண்டிருந்தார்கள். சமுதாயக் கண்ணோட்டத்துடன் ஆலயங்கள் மக்களை வழிநடத்தின. கிராமங்கள் குடியாட்சிக் கோபுரத்தின் அடிக்கற்கள் அவையே ஆன்மீக கோபுரத்தின் அத்திவாரமாகவும் விளங்கின. இறைநம்பிக்கையின் உறைவிடங்களாகக் கிராமங்கள் விளங்கின. எனவேதான் கிராமத்து ஆலயங்கள் அருளூற்றுச்சுரக்கின்ற பக்திநிலையங்களாகப் பரிணமித்தன. இன்றும் பரிணமித்துக் கொண்டிருக்கின்றன. நாகரிகமிக்க நகர்ப்புறச் சூழலில் சைவப்பண்பாடு பக்தியுணர்வு பல்கோணத்தாக்கத்தாற் பாழாகி விடுமோ! என அஞ்சக் கூடியவேளையில் அவற்றை உறுதியாகக் காத்துநிற்பவர் கிராமமக்களே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சைவப்பண்பாட்டையும் பக்திநெறியையும் பாதுகாத்துநிற்கின்ற தமிழீழக் கிராமங்களில் கொல்லங்கலட்டியில் அமைந்திருக்கும் கிளானைக் கிராமமும் ஒன்றெனக் கூறலாம் அது இயல்பாகவே புராதனப் பெருமைமிகு சூழலில் அமைந்திருக்கின்றது. மேற்கிற் கீரிமலைப்புனிததீர்த்தமும் கீழ்த்திசைமருங்கில் எத்திசையும் புகழ்பூத்த மாவைப்பதியும் புனிதச் சூழலிற் காணப்படும் இக்கிளானை பாரம்பரியமாகப் பக்திநெறி வளர்த்த பெருமைக்குரிய ஊராகும். இக்கிளானை மக்களின் காவற்தெய்வமாய் கனிந்தருள்பாலித்துநிற்கின்றார் ஞானவைரவர். தண்ணறுஞ்சோலையென தூயவிருட்சங்கள் நிழல்தர அந்த நீழலிலே வீற்றிருந்து வேண்டுவார்வேண்டுவதை ஈந்தருளும் ஞானவைரவர்மீது கிளானை மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை அளப்பரியதாகும் நாளொரு வண்ணமாக வளர்ந்துவரும் ஆலயத்தின் வளர்ச்சி மக்களின் நம்பிக்கையின் பிரதிபலிப்பேயாகும். நித்திய, நைமித்திய பூசைகள் ஒழுங்காக நிகழ்த்தப்படும் ஆலயமாக இது திகழ்கிறது.

ஈழத்திற்சைவம் இன்னலுக்குள்ளான அந்நியராட்சிக்காலத்திலே, குறிப்பாக, மதசுதந்திரம் முற்றாக மறுக்கப்பட்ட போத்துக்கேயராட்சிக் காலத்திலே இரகசியமாக இல்லங்கள் தோறும் வைரவ சூலங்கள் வழிபடப்பட்டன அந்தவகையிலே வைரப்பெருமான் எங்கள் சைவ உணர்வினைக்காத்து நின்ற பெருந்தெய்வமாக விளங்குகின்றார்' இதனாற்றான் இயல்பாகவே தமது சுதந்திரம், கலாச்சாரம் ஆகிய தனித்துவங்களைப் பேணி நிற்க விழையும் கிளானை மக்களின் இதயங்கவர்ந்த குலதெய்வமாகவும் வைரவர் விளங்குகின்றார். வைரவப்பெருமான் முக்கண்ணனின் மூர்த்தங்களில் ஒருவர். ''ஷேத்திரபாலகர்'' எனவும் குறிக்கப்படுகின்றார். ஆலயம், நகர், குறிச்சி எனப் பல இடங்களை 'ஷேத்திரம் எனும் சொல் சுட்டி நிற்கிறது. எனினும் ஆலயச் சூழலைக்காப்பதும், பரிபாலிப்பதும் அவரது தொழில்களாக சைவ ஆகமங்கள் குறிக்கின்றன. எனவேதான் கிராம மக்கள் தம் காவற் தெய்வமாக இவரைக் கொண்டதால் இது கிராமிய வழிபாடாக, பக்திமார்க்கமாக இன்று கிராமங்கள் தோறும் பரவி நிற்கிறது. கிளானைக் கிராமத்திலும் ஞானவைரவர் மக்களைக் காத்துநிற்கிறார். அவர்களது அன்பெனும் மஞ்சன நீரில் மூழ்கி அவர் அருள் செய்துநிற்கின்றார்.

சைவ ஆலயங்களில் உற்சவக் கிரியைகளுக்கு முன்னோடியாக நிகழ்த்தப்பெறும் கிராம சாந்தியில் வைரவ ஆராதனை முக்கியத்துவம் பெறுகின்றது. அவ்வேளையில் உச்சரிக்கப் படும் மந்திரங்கள்,

''உற்சவ காலத்தில் இக்கிராமத்தில் மங்களம் பொங்கவும்; அடியவர்களைக்காக்கவும்; வைரவ சுவாமி எழுந்தருளவேண்டும் எதிரிகள், கொள்ளைநோய், தீய உயிரினங்கள் விலகிச்செல்லவேண்டும்'' எனும் கருத்தினை வெளிப்படுத்துகின்றன. எனவே வைரப்பெருமான் அச்சத்தைப்போக்கும் அருளாளனாகவே போற்றப்படுகிறார். கிளாலைக் கிராமத்தில் அருளாளனான ஞானவைரவரும் மக்களின் அச்சத்தை அகற்றி அவலங்களைப்போக்கி அருள்சுரந்து நிற்கின்றார்.

ஆலயங்கள் பக்திவளர்க்கும் நிலையங்கள் மட்டுமன்றி ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுக் கோலங்களுக்கு உயிர்கொடுக்கும் நிலையங்களுமாகும். குறிப்பாகக் கிராமியக் கலைகளின் இருப்பிடமாகக் கிராமியக் கோயில்கள் விளங்குகின்றன கிளானை வைரவர் ஆலயமும் அக்கிராமத்தின் கலை கலாச்சாரங்களின் ஊற்றுக்கத்திழ்ந்து வந்துள்ளது சித்திரை முழுமதி நன்னாளில் பொங்கலும் சீர்பெற ஊரார் ஊற்றும் கஞ்சியும் அவ்வாலயத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளாய் ஊராரை ஒரு நிழலிற் சேர்த்து ஒருமைப்பாட்டைக்காத்து நிற்கின்றன கிளானைகிராமத்தின் உயிர்த்துடிப்பாய், ஆன்மீக நாதமாய், பண்பாட்டின் நிலைக்களனாய் அருள்புரிந்து நிற்கும் ஞானவைரவரின் அருள் மழையில் நனைந்து மக்கள் ஈடேற்றம் எய்திடட்டும்.

''பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியுமகந்தையுங் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்''

சி. சிவமகாராசா
தலைவர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

# கும்பாபிஷேக விளக்கம்

உலகத்திலுள்ள எல்லாமக்களும் சுகம் உண்டாகவேண்டும். துக்கம் உண்டாகக் கூடாது என்றே விரும்புகிறார்கள். ஆனால் அந்த சுகத்தையோ துக்கத்தையோ தனது விருப்பம்போல் அடையவோ விலக்கவோ முடிவதில்லை. ஆதலால் ஆன்மாக்கள் சுவதந்திரமற்றன. இவ்வான்மாக்கள் பிரமச்சரியம், சத்கர்மம், தபஸ் இவைகளால் ஆத்மஞானத்தையடைய வேண்டும் ஆன்மாவிற்கு நண்பனாய் ஆன்மாவினால் செய்யப்படும் கர்மாக்களுக்கு சாக்ஷியாய் ஹிருதய கமலத்தில் வீற்றிருக்கின்றார். இறைவன் சரீரமாகியரதத்தில் ஏறிய ஜீவனாகியதலைவன், மனமாகிய கடிவாளத்தால் இந்திரியங்களாகிய குதிரைகளை அடக்கி புத்தியாகிய தேரோட்டியால் நல்ல வழியில் செலுத்தி சமசாரமாகிய இருளைக்கடந்து சுவந்திரனாகியவனும்; சர்வக்ஞத்வம் முதலிய ஆறு குணங்களுள்ளவனும் அதாவது எல்லாமறிந்தவனும் எப்பொழுதும் திருப்தியுடையவனும் அனாதியே அறிவுடையவனும் எப்பொழுதும் குறைவற்ற சத்தியுடையவனும் அனந்த சக்தியுடையவனுமாகிய இறைவனை அடைய வேண்டும். இதற்கு இன்றி அமையாதது இறைவழிபாடு. இதற்குவேண்டிய நெறிமுறைகளை இறைவனின் பஞ்சமுகங்களின் நின்றும் தோற்றப்பட்ட ஆகமங்களின் மூலம் திருவாய் மலர்ந்தருளினார். நீதிநெயில் நிற்கும் உயர்ந்தோரும் ஞானநெறியில் நிற்கும் உயர்ந்தோரும் உய்ய தற்பொருட்டு சியாகமங்கள் இருத்தெட்டையும் தம்பெருங் கருணையினால் அருளச் செய்தார் அறைவன்.

இதில் பூசை என்பது ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படும். ஆன்மநலனைக் கருதி தன்னாலேயே செய்யப்படும். பூசை ஆன்மார்த்த பூசை உலகச் சேமம் குறித்துச் செய்யப்படும் பூசை, பரார்த்த பூசை இவ்விரு பூசைகளும் நித்தியம் நைமித்தியம், கம்யம் என மூன்று விதம், தினம் செய்யப்படும் உஷ காலபூசை முதலியன நித்தியபூசை எனப்படும். ஜீர்ணோத தாரணம், அஷ்டபந்தனம். கும்பாபிஷேகம், உற்சவம், பிராயச் சித்தம், கிரஹணபூசை முதலியன நைமித்திய பூசை எனப்படும். தனது இஷ்டசித்தியின் பொருட்டு செய்யப்படும் ஜன்ம நட்சத்திரகாலபூசை முதலியன காம்யமாகும். இவைகளின் விரிவு ஆகமத்திலேயே விஸ்தாரமாக கூறப்பட்டுள்ளது.

இதில் நைமித்திய பூசையே கும்பாபிஷேகமாகும். இதையே பெரும் சாந்திஎன திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

உரிஞ்சாய வாழ்கை
யமனுடையைப் போர்க்கும்
இருஞ் சாக்கியர்களெடுத்துரைப்ப
நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலிச்
சரமமந்த்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ
பூம்பாவாய்

பூம்பாவை திருப்பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் தூணிலும் இருக்கின்றார், துரும்பிலும் இருக்கின்றார் என்று சொல்வது போல் அங்கு இங்கெனாதபடி வெந்துறுநீர் போல் எங்கும் வியாபகமாய் இருக்கும் இறைவனை பசுவின் முலைக்கண் பால்பெறுவது போல் ஆலயத்தில் கும்பம், ஸ்தம்பம் பிம்பம் ஆகிய மூன்றிலும் ஆவாகித்து வழிபடும் முறையுள் கும்பத்திலும் பிம்பத்திலும் ஆவாகித்து வழிபடும் நிகழ்ச்சியே கும்பாபிஷேகம் எனப்படும். இதன் நிகழ்சிகளை எட்டுப்பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். இவற்றை ஊன்றிக் கவனிததோமானால் அடிப்படைத் தத்துவக் கருத்துக்களை நம்வாழ்க்கையிலேயே காணக் கூடியதாய் இருக்கும். அப்பெரும் பிரிவுகளாவன முறையே; வரித்தல், சுத்திகரித்தல், விக்கிர பிரதிஷ்டை, மிருத் சங்கிரகணம், யாகபூசை, கும்பாபிஷேகம், மகாபிஷேகம், மண்டலாபிஷேகம் ஆகியனவாம்.

## 1. வரித்தல்

### ஆசாரிய வருணம்:

கும்பாபிஷேகத்தை நிறைவேற்றத் தக்க ஆசாரியரைத் தேர்ந்தெடுத்தல் இவ் வாசாரியர் ஆசாரிய இலட்ஷணத்துடன் நல்லொழுக்கமும் ஆகம சாத்திர அறிவும் பக்தியும் நிறைந்தவராய் இருத்தல் வேண்டும் சிவாசாரியாருடைய தவவலிமையாலும் நித்திய நைமித்திய பூசைமுறையாக நடந்து வருவதாலும் உருவத்திருமேனி (விக்கிரகம்) தெய்வத்தன்மையுடையதாய் விளங்குகின்றது. இதில் சிவாசாரியாருடைய தவவலிமை முன்னதாக எடுத்துக் காட்டப்படுகிறது.

(அ) அநுமதி பெறல்: (தேவானுக்ஞை)

ஆசாரியர் பாலாலயம் சென்று இறைவனின் கும்பாபிஷேகத்திற்கென வைக்கப்பட்ட அவர்தன ஆலயத்திலோ பனருத்தாரண ஆலயத்திலோ ஆலயத்தினைப் பிரதிஷ்டை செய்ய அனுமதி தருமாறு வேண்டுதல்; இது தேவானுக்ஞை ஆகும். சிவாச்சாரியர்களை உபசரித்து அவர்களை வணங்கி கிரியைகளில் மந்திரலோபம் தந்திரலோபம். கிரியாலோபம் ஏற்படாது நடத்தித் தரவேண்டும் எனக்கு பிரதிஷ்டை செய்யத்தக்க கருதியைத் தரவேண்டும் என்று பிரார்த்திக்க அந்தச் சிவாசாரியர்கள் ஆசீர்வதித்தல். இதுவே சிவ ஆசாரிய னுக்ஞை எனப்படும்,

(இ) பிரார்த்தித்தல்: நடைபெறும் கிரியைகளுக்கு இயற்கையினுல் ஏற்படும் இடையூறுகளும் ஏற்படாதிருக்க விக்னேஸ்வர அனுக்ஞையும் கிரியைகள் மங்களகரமாக நிறைவேற நவக்கிரக ஹோமமும் செய்யப்படுகின்றது. இது பிரார்தித்தலாகும்.

## 2. சுத்திகரித்தல் :-

சிவதருமத்திற்காக நேர்மையான வழியில் ஈட்டிய பொருட்களை ஆசாரியார் சிவாஸ்திர மந்திரம், ஜெபம், ஹோமம் முதலியவற்றைச் செய்து கும்பநீரால் தெழித்து சுத்திசெய்து திரவ்விய விபாகமாக பதின் ஒன்ருகப் பிரித்து எஜமானிடம் சிவதருமத்தைச் செய்து முடிக்குமாறு பணிககின் ருர்.

திரவ்விய சுத்தி முடித்ததும் குருதன்னையும் இறைவன் ஆலயத்தையும் சுத்திகரிக்கின்ருர். பின் ஆன்ம சுத்தியின் பொருட்டு நெய், தேன், பழம் ஆகிய முப்பொருள்களில் ஆத்மதத்துவும், வித்தியா தத்துவம் சிவதத்துவம் ஆகிய தத்துவ பூசை செய்து அதை ஆசாரியார் பருகுகின்ருர். இதன்மூலம் அறிந்தோ அறியாமலோ செய்த சிவநிந்தை, சிவசாஸ்திரநிந்தை. சிவனடியார் நிந்தை. முதலியன நீங்கப் பெற்று ஆன்மசுத்தி அடைகிருர். பத்துவித நீராடி புறச்சுத்தியும் இதனுல் ஆரோக்கியமும் பெற்றுப் பலவிதமான பாபங்களும் நீங்கி மன ஒருமைப்பாடும் திரிகரணசுத்தியும் பெறுகின்ருர். நல்லறங்களைச் செய்யும் பொழு தீயசக்திகள் இடையூறு விளைவிக்காது இருக்க ரட்சோக்கின ஹோமம் செய்து நான்கு திசைகளில் இருக்கும் தேவர்களுக்கும் வணக்கம் செய்து எம்மை காத்தருளுமாறு வேண்டப்படுகின்றது. கிராமத்தை அமைதிப்படுத்தவும் அக்கிராமத்து மக்கள் நோயற்று, பிணியற்று, தீமைகள் அற்று சீரும் சிறப்புமாக விளங்க வேண்டும். அப்பொழுதுதான் ஆலயம் வளர்ச்சியடையும் அடியார்கள் வந்து வழிபட இடையூறுகள் இல்லாமல் இருக்கும் இதற்காகவே வைரவரைப் பிரதம காவல் தெய்வமாக வைத்து நான்குதிக்குகளிலும் வசிக்கும் அசுரர், ராட்சர், பிசாசர், பிரம ராட்சர் ஆகிய நால்வருக்கும் பலி கொடுத்து கிராம சாந்தி செய்யப்படுகின்றது.

மேலும் வெளிவீதியில் எட்டுத்திக்குகளிலும் வசிக்கும் யக்கர், அரக்கர், பூதங்கள் பிசர்சர்கள், பிரம்மராஸசர். மஹாகாளி, சரளீ வடுகர் ஆகிய அமைதிகுலைக்கும் தெய்வங்களை உறுக்கி விரட்டி அவற்றிற்கு வேண்டிய அவிசு வகைகளைக் கொடுத்து "இங்கே எம்பெருமானுக்குப் பிரதிஷ்டை நடைபெற இருப்பதால் நீங்கள் இவ்விடங்களை விட்டு நீங்கி மலையடிவாரம், காடு, ஆற்றங்கரை, பாலைவனம், மயானம் ஆகிய இடங்களுக்குச் சென்று வசியுங்கள்" என்று பிரார்த்தித்து பிரவேசபலி என்ற இக்கிரியை செய்யப்படுகின்றது உலகத்தில் வாழும் மக்களுக்கு சேமங்களைச் செய்யும் தேவர்களாகிய இந்திரன், அக்கினி, பாவபுண்ணியததின்படி தீர்

மத்தை நிலேநாட்டும் யமன், நைர்தி, மழையைப் பொழியும் வருணன், வாயு செல்வத்தை கொடுக்கும் குபேரன், ஈசானன், பிரம்மா, விஷ்ணு, ஆகிய லோக பாலகர்களே அவ்விடத்தில் வந்து வசிக்கச் செய்யவும் பூமியின் சுத்தியின் பொருட்டும் வாஸ்து சாந்தி எனப்படும் கிரியை செய்யப்படுகின்றது.

**வாஸ்துவின் வரலாறு :-**

முன்னொரு சமயம் அந்தகன் என்ற அரக்கனுடன் போர்புரியும் போது பரமேஸ்வரனுடைய நெற்றியில் நின்று வியர்வைத் துளி பூமியில் விழுந்தது அந்த வியர்வைப் பிந்துவின் நின்றும் மிகப்பயங்கரமான வாஸ்து புஷருன் என்ற அசுரன் உண்டானன் பிறகு அவ்வசுரன் சிவபெருமானேக் குறித்து கடும்தவம் இயற்றி உலகத்தையே அழிக்கத்தக்க பலத்தை பெற்றுன் தேவர்களேயும் துன்புறுத்தினன். அதனுல் பயந்தவர்களான தேவர்கள் சிவனே சரண் அடைந்தார்கள். அவ்விறைவனும் அவ்வரக்கர்க்ளே அடக்கத்தக்க பலமுள்ள ஒரு ருத்திரனேயும் மிகவும் சக்தி வாய்ந்த எட்டு மாயா பாசங்களேயும் படைத்தார். அந்தருத்திரன் அந்த எட்டுக் கயிறுகளால் அவ்வசுரனேக்கட்டி வீழ்தி பிரம்மன் முதலான ஐம்பத்து மூன்று தேவர்களே அவ்வசுரன்மீது உட்காரவேத்து அசுரனே அசையமுடியாமல் செய்து தேவர்களுக்கும் உலகில் நடைபெறும் நற்காரியங்களுக்கும் இடையூறு இல்லாமல் செய்தார், இதுவே வாஸ்துவின் தத்துவம் வாஸ்து புருஷனே பாதுகாப்பவர்களுக்கும் வாஸ்து புருஷனுக்கும் திருப்தியின் பொருட்டு செய்யப்படும் பூசை ஹோமம் முதலியனவே வாஸ்து சாந்தியாம்

**3 மிருத்சங்கிரகணம் :-**
**அங்குரார்பணம் :-**

பஞ்சகிருத்தியங்களில் படைப்பு என்ற கிருதியத்தை குறிப்பதுவே இது இதற்காக மண் எடுப்பதற்கு பூமாதேவியை பூசை செய்து படைப்புத் தொழிலுக்குரிய பூமி தேவியின் வயிற்றில் இருந்து மண்ணே எடுத்து மண் எடுத்த இடத்தில் கங்கை யமுனே முதலிய ஏழு கங்கைகளே பூசைசெய்து அவற்றை அவ்விடத்தில் அவாகணம் செய்து விட்டு எடுத்த மண்ணில் ஆசாரியார் (நவ தானியம்) பாலிகை போடுவார். அவ்வங்குரம் நன்முக முளேத்தால் நாட்டில் தானிப வளர்ச்சியுண்டாகி படைப்புகள் வளர்ச்சியடையும் பின் ஆசாரியார் பாலாயத்தில் பிரசன்னுபிடேகம் செய்வார். இதன்கருத்து பாலாலயத்தில் இருந்து யாகசாலேக்கு பிரதிஷ்டையின் பொருட்டு அழைத்துச் செல்லக் கருதியுள்ளோம், இறைவா எங்கள் அழைப்பை ஏற்றுச் சகல பிரகார மூர்த்திகளுடனும் யாகசாலேக்கு எழுந்தருள வேண்டும் என்று பிரார்த்திக்க இறைவன் மகிழ்ச்சியுடன் அவ்விதமே எழுந்தருள ஆயத்தமாவார் என்பதாம்.

கடஸ்தாபனம் குடத்தை மாவிலே தேங்காய் கூர்சம் வஸ்திரம் மாலே இவைகளால் அலங்கரித்து பாலாலயத்தில் மூர்த்தியின் முன்வைத்து உருவத்திருமேனியில் இருக்கும் இறைவனே மந்திரங்கள்மூலம் அருஉருவத் திருமேனியாகிய கும்பத்தில் சகலகலேகளுடனும் ஆவாகித்து (கதாகர்ஷணம்) பூஜித்து மந்திரபராயணத்துடனும் சகல வாத்திய கோஷத்துடனும் வலமாகச் சென்று யாக சாலேயில் தன்னியபீடத்தில் ஆசாரியர் ஸ்தாபித்தல் இது கடஸ்தாபனம் ஆகும்.

**4. யாகபூஜை :-**

பின் ஆசாரியன் முறைப்படி பூசைகள் செய்து அக்கினிமூட்டி யாகபூசை செய்ய வேண்டும். யாகபூசையானது அங்குரார்ப்பணம் செய்த நாள்முதல் மூன்று நாளிலாவது ஐந்து நாளிலாவது ஏழு நாளிலாவது யாகம் செய்ய வேண்டும். ''யாகாரம்பம் நிசிநின்லாம்'' முறைப்படி யாகாரம்பம் இரவிலேயே செய்யப்படவேண்டும். ஆகவே ஒரு மாலேயும் ஒரு காலேயும் சேர்ந்துதான் ஒரு நாள் யாக பூசையாக கொள்ளப்படும் இதன்படி நான்கு கால யாக பூசையை மூன்று நாட்களிலும் எட்டு கால யாக பூசையை ஐந்து நாட்களிலும் பன்னிரண்டு கால யாக பூசையை ஏழு நாட்களிலும் பதினறு கால யாக பூயையை ஒன்பது நாட்களிலும் இருபத்தெட்டுக் கால யாக பூசையை பதினேந்து நாட்களிலும் ஐம்பத்தெட்டுக் கால யாகபூசையை முப்பது நாட்

களிலும் செய்ய வேண்டும். என்ற கால பேதத்தில் விளக்கப்பட்டுள்ளது இதன்படி எவ்வளவு எண்ணிக்கைகூட யாகம் செய்கின்றார்களோ அவ்வளவுதூரம் உருவேற திருவேறும் என்றவாக்கின்படி இறைவன் ஹோமம் பூசை ஜபம் பாராயணம் இவற்றால் திருப்தி அடைகிறார். ஸ்பர்சாகுதி இவ்விதம் யாகசாலையில் கலசத்தில் (அவ்வுருவத்திருமேனியில்) வைத்து வழிபடும் திருவருள் சக்திக்கும் கர்ப்பக்கிரகத்தில் இருக்கும் உருவத்திருமேனிக்கும் முப்பிரி தர்ப்பைக்கயிற்றால் தொடர்புபடுத்தி குண்ட சிவாக்கினியில் ஆகுதிசெய்து சுருக்சுருவத்துடன் ஞானகட்கத்தால் தர்ப்பைக்கயிற்றைத் தொட்டுக்கொண்டு உருவத்திருமேனிவரை சென்று உருவத்திருமேனியை பிரம்மபாகம், விஷ்ணுபாகம், ருத்திரபாகம் என்று மூன்றாகப் பிரித்து பூஜித்து சுருக்சுருவத்தில் எஞ்சியிருக்கும் நெய்யை அந்தந்தப் பாசத்தில் ஹோமம் செய்கிறார். ஆசாரியார் இப்படி மூன்று முறை செய்யப்படுகின்றது இதன் மூலயம் யாகசாலையில் நிகழ்த்திய ஹோமத்தின் பலன்கள் யாவும் இவ் உருவத்திருமேனியில் நிலைத்து நின்று அருள் புரிபட்டும் என்பதே கருத்தாம். இவற்றால் வேதிகையில் வைக்க பட்டு பூஜித்த கலச நீரானது அருள் அமுதமாக மாறுகின்யது.

## 5. சிவாவிக்கிரகப் பிரதிஷ்டை

உருவத்திருமேனி புதிதாக ஸ்தாபிக்கப்படுவதாயின் ஆசாரியார் சிற்பியைக் கொண்டு (நயநோர்மீலநம்) கண் திறத்தல் என்ற கிரியையை செய்விக்கின்றார். உருவத்திருமேனியை சுற்றி திரையிட்டு ஆசாரியார் கையிலிருந்து சிற்பி ஆயுதத்தைப் பெற்று முதலில் நெற்றிக்கண்ணையும் பின் சூரிய நேத்திரத்தையும் சந்திர நேத்திரத்தையும் இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டு ஆயுதத்தால் திறக்கின்றார். பின் வாய், மூக்கு, காது, கொப்பூழ், நகக்கண் முதலிய ஒன்பது இடங்களில் சிறு துவாரத்தை உண்டுபண்ணுகின்றார். குரு பின் பிம்பசுத்தி முடித்துப் பால், நெய், தேன், நெல், கண்ணாடி, யானை, அந்தணர், கன்னிப்பெண், தீபம், பசு, எஜமான், பஞ்சாராத்தி இவைகளை இறைவனுக்கு முன் வைத்துத் தர்சிக்கச் செய்கின்றார். இதனால் உலகின் பசுச்செல்வம், தானியவளர்ச்சி, இன்பவாழ்வு, வீரியம், மனோபலம், சிவநெறி, கற்பு, அறிவுச்சுடர், சிவதர்மம் இவையாவும் நாட்டில் சிறப்பாக விளங்கும் என்பதாகும். பின் உருவத் திருமேனியை மார்பளவு (சக்திபாகமாக இருந்தால் காதளவுவரை) நீரில் வைத்து விசேச பூசை செய்கின்றார். பின் நீரில் இருந்து எடுத்துச் சுத்தமான தானியத்தைப் புண்ணியாக நீரில் சுத்திசெய்து முன்கூறியளவு தானியத்தால் மூடி எண்மலரால் அர்சித்து ஒரு முகூர்த்த காலம்வரை வைத்துப் பின் எடுத்து விக்கிரகத்தை வீதிவலம் வரச் செய்து கோபுர வாசலை அண்மித்ததும் (திருஷ்டிதோச நிவர்த்தி) கண்ணாறு நீங்குதல் என்ற கிரியை செய்கின்றார் பின் மாலையில் சயநாரோபணம் என்ற கிரியை செய்து முடிக்கின்றார். சுத்தமான விரிப்பில் தலையணையில் படுக்கவைத்துப் பூசை செய்தல் சயநாரோபணம் ஆகும்.

கண் திறத்தல், நீரில் வைத்து நெற்குவியலில் வைத்தல், வீதிவலம் வருதல், படுக்கையில் விடுதல் இவ்வைந்து கிரியைகளும் பஞ்சபூதங்களாக விரித்து உயிர்களை வாழவைக்கும் இறைவனை உருவத்திருமேனியில் சேர்தல் ஆகிய தத்துவத்தை விளக்குவதாகும் அவையாவன முறையே கண்திறத்தல் என்பது ஒளியை சேர்தலாம். ஜலாதிவாசம் என்பது நீர் ஆகிய பூதத்தைச் சேர்தலாகும். தான்னியாதிவாசம் என்பது பூமியாகிய பூதத்தைச் சேர்தலாம் வீதிவலம் வருதல் என்பது ஆகாய பூதத்தைச் சேர்தலாம். சயநம் வாயு பூதத்தைச் சேர்தலாம்.

பின் சிறந்ததோர் முகூர்த்தத்தில் கர்ப்பக்கிருகத்தில் ஆதாரசிலையில் ரத்தின ஸ்தாபனம், யந்திர ஸ்தாபனம் செய்து அதன்மேல் தாரசிலையுடன் உருவத்திருமேனியை அஷ்டபந்தனம் என்னும் கிரியைமூலம் இணைக்கின்றார். ஆசாரியர் அஷ்டபந்தனம் இல்லாமல் சிலகாலம் கூட ஸ்வாமி இருக்கக்கூடாது என்பதால் எப்பொழுது அஷ்டபந்தனம் இல்லாமல் போனதோ அப்பொழுது மருந்து சாத்தப்படவேண்டும். ஆதலால் தினவார முகூர்த்தங்களைப் பாராமலும் மாஸபக்ஷங்களைப் பாராமலும் எல்லா மாதங்களிலும்

அஷ்டபந்தனம் செய்யலாமெனக் கூறப்படுகிறது.

ஸிர்வமாஸேசு கர்தவ்ய அஸ்டபந்தன முச்யதே—

தினவார முகூர்தா திஞ்வர்யேக்து விசக்ஷணம்:

சாத்தப்படும் மருந்தானது அஷ்டபந்தனம், பஞ்சபந்தனம், திரிபந்தனம் என மூன்று விதமாகும் இவை முறையே சிருஷ்டி என்றும் ஸ்திதி என்றும் சங்காரம் என்றும் முச் செயல்களை யுடையதாம். இவற்றில் சேர்க்கப்படும் மருந்துகளாவன: பூங்காவி, சுக்கான், செம்பஞ்சு, கொம்பரக்கு, வெள்ளை மெழுகு, சாதிலிங்கம், குங்கிலியம், எருமை வெண்ணெய் எனச் சொல்லப்படுகிறது. இவைகளை ஆசாரியர் சரியான அளவை எடுத்து முறைப்படி பக்தியுடன் சேர்த்து சாத்துதல் வேண்டும். இவ்வஷ்டபந்தமானது இல்லாவிடில் அரசன் அவலம் அடைவான் உலகத்தில் அரக்கர்களால் அல்லல் உண்டாகும். அஷ்டபந்தனம் இல்லாத இடத்துச் செய்யப்படும் பூசையும் நைவேத்தியமும் பலிபோடுகலும் நித்தியோத்ஸவமும் நமஸ்காரமும் பிரதக்ஷணமும் பயன் அற்றதாம் அஷ்டபந்தனமானது: கிழக்கில் இல்லாவிடில் சண்டையானது சம்பவிக்கும். தென்கிழக்கில் இல்லாவிடில் தீயினால் நாசம் உண்டாகும். தெற்கில் இல்லாவிடில் நோயினால் பீடை உண்டாகும். தென்மேற்கில் இல்லாவிடில் கிராமத்திற்கு அழிவு உண்டாகும். மேற்கில் இல்லாவிடில் மழையினால் நாசம் உண்டாகும். வடமேற்கில் இல்லாவிடில் பயிர்களுக்கு சேதம் ஏற்படும். வடக்கில் இல்லாவிடில் பொருட்களுக்கு சேதம் ஏற்படும். சுற்றிலும் இல்லாவிடில் எல்லாவற்றிற்கும் அழிவு உண்டாகும். ஆகவே ஆலய பரிபாலகர்கள் என்றாலும் ஆசாரியர்கள் என்றாலும் இவ் விடயத்தில் அசிரத்தையாக இருக்கக்கூடாது.

அஷ்டபந்தனத்தின் பின் பிம்பசுத்தி செய்யப்படுகின்றது. தர்ப்பையடி மண், நாவலடி மண், ஆலடி மண், வில்வமரத்தடி மண், துளசியடி மண், புற்று மண் இவைகளை ஒரு மண்பாத்திரத்தில் இட்டு இதுபோல் அரசு, ஆல், வில்வம், அத்தி, நாவல், மா இவைகளின் தளிரை ஒரு பாத்திரத்திலும் பட்டைகளை இன்னொரு பாத்திரத்திலும் இட்டு நீர் நிறைத்து ஊறவைத்து இதில் ஆத்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் ஆகிய தத்துபூசைகளைச் செய்து அந்த நீரால் உருவத்திருமேனியை அபிஷேகித்தலே பிம்ப சுத்தியாகும். இவ்விதம் முறையாக பிம்பசுத்தி செய்வதால் தெய்வ சாண்ணித்தியம் உண்டாகின்றது.

## 6. கும்பாபிசேகம் :–

விஷேச பூர்ணாகுதி கொடுத்து தீபாராதனை செய்து யாத்திராதானம் முகூர்த்ததானம் செய்து கும்பத்தை தூக்கி அடியார்கள் புடைசூழ மேளவாத்தியங்களுடன் வலமாக வீதிவலம் வந்து கர்ப்பக்கிருகம் சென்று சுப முகூர்த்தத்தில் அருளமுதமாகிய கலச நீரை உருவத்திருமேனியில் ஆசாரியார் அபிஷேகம் செய்கின்றார். நடனசபேசனாகிய எம்பெருமானின் சடாமுடியின்கண் குறைவற்ற நிறைவாக விளங்கும் பரணசந்திரனையும் இதிலிருந்து பெருக்கெடுத்துவரும் அமுதநீராகிய கங்கையையும் அக்காட்சியையும் உள்ளத்தால் சிவாச்சாரியார் தியானித்துக்கொண்டு மந்திரங்களின் உயிராகிய நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தையும் நடுமணியாகத்திகழும் ஸ்ரீருத்திரத்தையும் ஜெபித்துக் கொண்டு மந்திர ஜபம் பூசைகளினால் அருளமுதமாகிய கும்பநீரை அத்துடன் சேர்த்து அபிஷேகம் செய்வதாக அமைந்தபடியால் மஹாகும்பாபிடேகம் எனக் கருதப்படுகிறது.

## 7. மஹாபிஷேகம் :-

கும்பாபிஷேகம் முடிந்தபின் பால், தயிர் இளநீர் பஞ்சாமிர்தம் முதலிய விஷேஷ திரவியங்களால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தல் மஹோபிஷேகமாகும். கும்பாபிஷேகத்தின்முன் யாகசாலையில் அக்கினியின் ஏழுநாக்குகளிலும் கொடுக்கப்பட்ட ஆகுதிகளை பின்திரும்ப உருவத்திருமேனியில் மறைந்திருக்கும் பரஞ்சோதியாகிய ஆயிரம் நாக்குகளைக்கொண்ட சோதிமயமான இறைனுவக்கு அபிஷேகித்தலே மஹாபிடேகம். இதனால் இறைவனின் திருவருள் நிறைவு பெறுகின்றது. அபிஷேகமும் அர்ச்சனையும் சிவன் விரும்பியதொன்றாகும்.

8. **மண்டலாபிஷேகம் :-**

மஹா அபிசேகத்தையும் சேர்த்து தொடர்ந்து நாற்பத்தைந்து நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறும் அபிஷேக பூசையே மண்டலாபிஷேகமாகும். இதை திரிபட்சிகா மண்டலாபிஷேகம் எனச்சொல்லப்படுகின்றது. ஒரு பட்சம் பதினைந்து நாட்கள். மூன்று பட்சம் சேர்த்து வருவதால் திரிபட்இகம் என அழைக்கப்படுகின்றது. இயல்புக்கு ஏற்றவாறு பதினைந்து நாட்களும் இரண்டு பட்சம் சேர்த்து முப்பது நாட்களுளும் செய்து விருகின்றார்கள். பின்பு நாற்பத்தைந்தாவது நாள் எம் பெருமானுக்கு நவோத்திர சகஸ்ர அஸ்டோத்தரசத சங்காபிஷேகம் நடைபெறுவது வழக்கமாகும்.

இக் கும்பாபிடேக விளக்கக் கட்டுரை மாலை கிளானை ஞான வைரவர் ஆலய கும்பாபிடேக மலரில்வெளியாக இருப்பது எம்பெருமானின். திருவருளே இக்கட்டுரை இம்மலரில் வெளியாவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அடியார்கள் இதனை வாசித்து விளக்கத்துடன் இறை வழிபாடு செய்து எம்பெருமான் திருவருளைப் பெறுவார்களாக.

**சிவஸ்ரீ கி. உருத்திரபுரேஸ்வரக் குருக்கள்**
அகில இலங்கை வீரசைவ குருமஹா சந்நிதானம்
ஸ்ரீரேணுகாச்சிரம பட்டத்தரசு

# சைவ வழிபாடுகளும் தொண்டுகளும்

சைவப் புலவர் சு. செல்லத்துரை

எங்கும் நிறைந்து எல்லாமாய் இருக்கும் இறைவன் குணங்குறிகளைக் கடந்தவனாய்ச் சிற்றறிவுக்கு எட்டாதவனாய்த் திகழ்கின்றான். இறைவனின் ஆணையில் இவ்வுலகம் இயங்குகின்றது. குணங்குறிகளற்ற இறைவனுக்குக் குறிகளும் அடையாளமும் கோயிலும் வகுத்து வழிபடுகின்றோம். ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி வணங்குகின்றோம். காணும் அடையாளங்கள் இருந்தால் மனதுக்கு எதுவும் எளிதாகப் புலப்படும். பொதுவான அறிவுடையவர்களுக்கு இறைவன் இருப்பும் இயல்புகளும் தெரிவது அருமையாக இருக்கும். நுணுகி அறிபவர்களுக்கு மட்டும் அவன் உணர்வு நிலைகள் நன்கு விளங்கக்கூடும். ஆதலால் இறைவனுக்கென்று அடையாளமும் கோயிலும் வகுத்து விழாக்களும் செய்ய முன்னோர் முற்பட்டனர்

கோயில், வழிபடுவோர், பூசகர், நிர்வாகம் ஆகிய முத்திறத்தாரோடும் தொடர்புபடுகிறது. இவர்கள் தத்தம் பொறுப்பைச் சரியாகச் செய்வதிலேயே கோயில் மகிமை தங்கியுள்ளது. பூசைக்கு வேண்டிய வசதிகளை நிர்வாகமும், பூசைக்குத் தேவையான உதவிகளை வழிபடுவோரும், பூசைக் கிரியைகளைப் பூசகரும் செவ்வனே செய்தல் வேண்டும். இந்த அளவில் ஆலய வழிபாடும் அதன் பயனும் அமைந்துவிட மாட்டா. சிவாலய சேவை என்ற சிந்தனையோடு இறைவனை நெஞ்சு நெக்கு நினைந்து உள்ளம் உருகிப் பக்தி உணர்வோடு இவற்றைச் செய்தல் வேண்டும். சிவாலய வழிபாட்டின் உண்மை நோக்கத்தையும் வழிமுறைகளையும் அறிந்தொழுகும் சித்தாந்த விளக்கச் சீலர்களாக ஒவ்வொருவரும் திகழ வேண்டும். "மந்திரமும் தேவும், மருந்தும், குருஅருளும் மெய்யென்னில் மெய், பொய்யென்னில் பொய்" என்ற ஔவை மூதாட்டியின் கருத்துப்படி ஆலய சேவைகள் அனைத்திலும் பூரண நம்பிக்கை வைத்து, இதய சுத்தியோடு வழிபாடு இயற்ற வேண்டும்.

"உரு ஏறத் திரு ஏறும்" என்பர் பெரியோர். வழிபாடு, பூசை ஆராதனை மந்திரம் தோத்திரம் ஆகியனவற்றால் இறைவனின் திருவுருவத்தில் உருவேற்றப்படுகின்றது. அதன் பயனாய் மக்களை வாழ்விக்கும் திருவருளை அத்திருவுருவமாகிய இறைவனிடமிருந்து பெறமுடிகின்றது. இந்த உண்மைக்கு உதாரணமாகத் திகழும் ஓர் ஆலயமே கிளானை வயிரவர் கோயில் எனில் மிகையாகாது. இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகட்கு முற்பட்ட பழமை வாய்ந்த இப்பதியில் அன்றுமுதல் இன்றுவரை ஆண்டு முழுவதும் வருகின்ற புண்ணிய நாட்களில் விசேட பூசை ஆராதனைகளும், அபிடேக விழாக்களும், கூட்டு ஆராதனையும், சைவநற்சிந்தனைகளும் தவறாது இடம்பெறுவது இத்தலத்திற்கேயுரிய தனித்துவமாகும், புராணபடனங்கள் - குறிப்பாகத் திருவாதவூரடிகள் புராண படனம் இங்கு நிகழும் முறையே ஒரு தனிச் சிறப்பாகும், பழம் பெருமை

வாய்ந்த மாவை முருகனை உதய திசையிலும் கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானை அஸ்தமன திசையிலும் கொண்டு அவ்வாலயங்களின் பாரம்பரியங்கள் இங்கு பிரதிபலிக்கும் வகையில் மக்கள் அனுட்டான சீலர்களாகத் திகழ்வது கண்கூடு காலத்துக்குக் காலம் மக்களை வழிநடத்தவல்ல புண்ணிய சீலர்கள் இங்குதோன்றிச் சைவநற்றொண்டர்களாக மக்களுக்கு முன்னோடிகளாக விளங்கிவருவதும் இப்பகுதியின் தனிச்சிறப்பாகும். 1950 களில் வடபகுதியில் பிரசித்திபெற்ற சைவத்தொண்டராகத் திகழ்ந்த கீரிமலைமணியம் எனப் பெருமையாய் அழைக்கப்படும் பெரியார் நா சி சுப்பிரமணியம் அவர்கள் இப்பகுதியில் பண்ணிசை சைவப்பிரசங்கம் புராணபடனம் சிறுவர்களுக்கான போட்டிகள் முதலானவற்றை முன்னின்று ஒழுங்கு செய்து நடத்தியமை நினைவுகூரத்தக்கதே அந்த மரபு தவறாது பெரியார்கள் இன்றும் அதனைத் தொடர்வதும் போற்றத்தக்கதே.

"என்கடன் பணி செய்துகிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளின் வாக்கிற்கு இலக்கியமாக திகழும் பரிபாலனசபைத்தலைவர் மதிப்பார்ந்த திரு. மு. நடராசா அவர்கள் சைவத்தொண்டுகளையும் வழிபாட்டு முறைகளையும் செம்மையுறச் செழிக்கச் செய்துவருவது யாவரும் அறிந்ததே. இத்தகு சிறப்புகளால் கிளானைப்பதி சிவப்பொலிவுடன் திகழ்வதைக் காண்கின்றோம் அத்துடன் இப்பதியிற் பிறந்து வளரும் ஒவ்வொரு சிறுவர்க்கும் இவ்வாலயம் சைவ வாழ்வுக்கு நெறிப்படுத்தும் பயிற்சிக்களமாக விளங்குகின்றது என்பது பெருமைக்குரியது. பெரியோர்கள் தாய்மார்கள் ஒவ்வொருவரும் மிக்க பயபக்தியுடன் வழிபாடியற்றும் காட்சி, கூடியிருந்து கூட்டுப்பிரார்த்தனை செய்யும் கோலம், அமைதியாயிருந்து பிரசங்கம் கேட்கும் பான்மை புனிதமான பூசைத்திரவியங்களைச் சேகரித்து சிரத்தையுடன் தேடிக்கொணர்ந்து நிவேதிக்கும் செம்மை இவையெல்லாம் உள்ளத்தை உருக்கவல்லன.

உள்ளமும் உடலும் ஒன்றிணைந்து செய்யப்படும் தொண்டுகளே உண்மை வழிபாடாகும், சைவவழிபாடு ஆலயத் தொண்டுகளின் வாயிலாகவே பூரணத்துவம் அடைந்து உண்மைப்பயன் விளைக்கும்.

வணக்கம்

சைவப்புலவர் சு செல்லத்துரை

# வைரவர் வழிபாட்டின் மகத்துவம்

மு. மார்க்கண்டு

ஈழவள நாட்டிலே வைரவ மூர்த்தியின் வழிபாடானது பல நூற்றுண்டுகளுக்கு முன் பிருந்தே ஆரம்பமாகி இருந்தாலும் அந்நியரது ஆட்சிக் காலத்தின்போதே புதிய திருப்பத்தினை அடைந்தது. அந்நியர் தமது மதமாகிய கிறிஸ்தவ மதத்திற்கு சைவ மக்களாகிய எம்மவரை மதமாற்றஞ் செய்து அவர்களுக்குப் பல சலுகைகளை அளிக்க முன்வந்ததனல் சுகபோக வாழ்க்கையை விரும்பிய பலர் மதமாற்றத்திற்குத் தலைப்பட்டனர். கிறிஸ்தவ மதத்தைத் தழுவத் தொடங்கியதும், சைவக் கோயில்கள் இடிபடத் தொடங்கிய காலகட்டத்திலே, சைவப் பற்றுடைய பெருங்குடி மக்கள் தமது ஆலயங்கள் தரைமட்டமானதை அறிந்து மனம் நொந்தபோதும் தமது காவல்தெய்வமாகிய வைரவரைக் கல்லிலும், சூலத்திலும் தமது இல்லங்களிலும் விருட்சங்களின் கீழும். பொது இடங்களிலும் தனிப்பட்ட இடங்களிலும் அந்நிய அதிக்க வெறியர் கண்களுக்குத் தெரியாத வகையிலே வழிபாடியற்றி வருவராயினர்: இதனல் ஈழவளநாட்டிலே வைரவர் வழிபாடு தனிச் சிறப்புப் பெற்று ஒரு புதிய திருப்பத்தினை அடையலாயிற்று.

பரமனை மதித்திடாப் பங்கயாசனனகிய பிரமனின் அகந்தையை அடக்குவதற்காகப் பரம்பொருளாகிய சிவனல் தோற்றுவிக்கப் பட்டவரே வைரவ மூர்த்தியாவர். வைரவர் அம்பிகையின் அபிமான புத்திரராகக் கருதப்படுபவர். தம்மை வழிபடும் அன்பர்களது துன்பங்களைக் களைந்து காத்தருளும் சக்திமிக்கவர்: வைரவரை வழிபட்டால் வீட்டில் உள்ள துன்பம் நீங்கும், பகைவர் பயம் அகலும், அச்சம் அகன்று அஞ்சாமை ஏற்படும் என்ற நம்பிக்கையிலே வழிபாடியற்றி வந்தார்கள். அந்தவகையிலேயே அமைக்கப் பெற்றவர்தான் எமது கிளானை ஞானவைரவராவர்.

கிளானைவாழ் மக்கள் சைவசமயப்பற்று மிக்க ஆசாரசீலர்: வைரவர்பால் மிகுந்த பக்தியும் அளவற்ற நம்பிக்கையும் உடையவர்கள். ஆலயத்தைச் சிறப்பாகப் பேணுவதற்காக ஒரு பரிபாலன சபையை அமைத்து அச்சபையின் கட்டுக்கோப்புக்குள்ளமைந்து நடப்பவர்கள். மும்மலங்களின் தன்மையிலிருந்து சிறிதளவாவது விடுபடாத சிலரால் சிற்சில காலங்களில் சில பிரச்சனைகள் எழுந்தபோதிலும் பெரும்பான்மை மக்கள் ஒருங்கிணைந்து ஒத்துழைப்பு நல்குவதால் ஆலயம் மிகவும் சிறந்த முறையில் பரிபாலிக்கப்படுகின்றது. கிளானைவாழ் இளைஞர்கள் வைரவர்பால் மிகுந்த பக்தியும் அளவற்ற நம்பிக்கையும் உடையவர்களாதலால் காலத்திற்குக் காலம் நடைபெறும் திருப்பணி வேலைகளின்போது தமது உடல் நலத்தையும் பார்க்காது தொண்டாற்றுந் தன்மையினர். ஊரவர்கள் யாவரும் பூசைகளில் பங்குபற்றுவதோடு உற்சவங்களை மிக சிறப்பாகச் செய்பவர்கள்,

கிளானை ஞானவைரவர் ஆலயம் அமைக்கப்பெற்று நடந்து முடிவுற்றுள்ள நான்காவது கும்பாபிஷேகத்தை நினைவூட்டும் வகையில் இம் மலர் இடம்பெறுகிறது. கிளானை வாழ் மக்கள் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ எம்பெருமான் அருள்பாலிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

மு. மார்க்கண்டு
இளைப்பாறிய ஆசிரியர்.

# மாவை - இளானை ஞான வையிரவர் ஆலய வரலாறு

இந்தியாவிலுள்ள பல புண்ணிய சேத்திரங்களைத் தரிசித்தும் தனக்கு ஏற்பட்ட நோய் நீங்கப்பெறாத சோழ அரசியாகிய மாருதப்புரவீகவல்லி ஈழத்திற்கு வந்து. வடபாலமைந்த கோவிற் கடவையின் ஒருராகிய கீரிமலையின் கண்தவஞ் செய்த நகுல முனிவரைச் சந்தித்து, அவரது ஆசியுடன் கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடி நகுலேஸ்வரப் பெருமானை வணங்கியதால் தனது மாமுக நோய் நீங்கப்பெற்றார் என்பது வரலாறு கண்ட உண்மையாகும். நோய்நீங்கிப் பேரழகு பெற்றதனால் அகமிக மகிழ்ந்த அவ்வரசி இந்தியாவிலிருந்து காங்கேயன் விக்கிரகத்தை வரவழைத்துக் கோவிற்கடவையின் இன்னொரு கிராமத்தில் ஆலயம் அமைத்துக் காங்கேசனைப் பிரதிஷ்டை செய்தார். மாருதப்புரவீகவல்லியின் மாமுகம் நீங்கியதால் கோயிலைச் சூழவுள்ள பகுதிக்கு மாவிட்டபுரம் என்றபெயர் வழங்கலாயிற்று. அக்காலத்தில் கீரிமலை. மாவிட்டபுரம், காங்கேசன்துறை ஆகிய கிராமங்களைச் சூழவுள்ள பிரதேசம் ''கோவிற் கடவை'' என்ற பெயரினால் அழைக்கப்பட்டது. கோயிற்கடவையின் ஒரு பகுதியாகத் திகழ்வது இளானை என்னும் கிராமமாகும். இற்றைக்கு எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் இளானைப் பதியில் எழுந்தருளிய இறைவனே தற்பொழுது ''மாவை - இளானை ஞானவைரவர்'' என அழைக்கப்படும் அற்புதத் தெய்வமாகும்.

கொல்லங்கலட்டியில் வாழும் காசிநாத உபாத்தியாயரின் தந்தையாரின் பெயர் ஆறுப்பிள்ளை. இவரை ஆலோசனை ஆறுப்பிள்ளை என்றும் அழைப்பர். ஆறுப்பிள்ளை என்பவரின் தாயாரின் பெயர் சீதேவன்பிள்ளை. சீதேவன்பிள்ளையின் சகோதரியின் பெயர் சின்னச்சிப்பிள்ளை. சின்னச்சிப்பிள்ளை குடும்பத்தினருக்கும் பழவீட்டார் குடும்பத்தினருக்கும் விவாகத் தொடர்பு காரணமாக உறவுமுறை ஏற்பட்டது.

எமது ஆலயமும் பூசகர் வாழும் வீடும் அமைந்திருக்கும் நிலம் ஒரு குடும்பத்தவர்க்கும் சொந்தமானது. வைரவப்பெருமானைப் பூசிக்கும் பூசகர் அந்தத் தர்ம சொத்தில் வாழ்பவராக இருக்கவேண்டும் என்பது தர்மசொத்து அளித்தவர்களின் நிபந்தனையாகும். தற்பொழுது கோயில் அமைந்துள்ள பகுதி இற்றைக்கு நூறாண்டுகளுக்கு முன் அடர்ந்த பற்றைகள் மரங்கள் நிறைந்த காடாகக் காட்சியளித்தது ஆனால் அங்கு வானளாவ உயர்ந்த பனைமரங்களும் நின்றன. காணிச் சொந்தக்காரர் காணிக்கு வரும்பொழுது ஏற்படும் அச்சத்தைத் தவிர்ப்பதற்காக ஒரு கொன்றைமரத்தின்கீழ் சூலத்தை வைத்து வழிபட்டுவந்தனர். பனம்பழம் பொறுக்க வந்த அக் குடும்பத்தினர்க்குப் பாதுகாப்பாக இருந்து அருள் புரிந்தவர். அச் சூலத்தில் எழுந்தருளிய வைரவப் பெருமானாகும் வைரவப் பெருமானுக்குக் கோயிற் சொத்தாகப் பெருங்காணியை வழங்கியுள்ள அக்குடும்பத்தவர் எத்தனையோ சந்தர்ப்பங்களில் ஊர்ப்பிரமுகர்கள் வேண்டியும் எதுவித முன்னீட்டிற்கும் நிற்காது ஒதுங்கியமை அவர்களது பெருந்தன்மையைக் காட்டுகின்றது.

சூலம் அமைந்திருந்த நிலத்திற்கு அண்மையிலுள்ள நிலங்களிற் சிலர் குடியேறத் தொடங்கினர். தற்பொழுது ஆலயம் அமைந்திருக்கும் இடத்திற்கு முன்னுள்ள நிலத்தில் காட்டர் கந்தையா என்பவரின் தந்தையாராகிய கதிரிப்பிள்ளை என்பவரும் அவரது சுற்றத்தவர்களும் குடியேறினர். கொன்றை மரத்தின்கீழ் சூலத்தில் எழுந்தருளிய வைரவப்பெருமானுக்குக் கூரை அமைத்து அரைச்சுவரும் எழுப்பப்பட்டது. வைரவப் பெருமான்மீது மட்டற்ற பக்தி கொண்ட கதிரிப்பிள்ளை குடும்பத்தினர் பொங்கல் வழிபாட்டை மேற்கொண்டனர். நெடுங்காலம்வரை பொங்கல் வழிபாட்டின் போது முதற் பொங்கற் பானையை வைப்பவர்கள் இவர்கள் வம்சத்தினராகவே வழங்கி வந்தது. பின்பு பூசகரே முதற்பானையை

வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தற்பொழுது கோயிலில் இருந்து சிறிது தூரத்தில் வாழ்ந்து வரினும் வழிபாட்டைக் கைவிடாததுடன் வருடா வருடம் நடைபெறும் அலங்கார உற்சவங்களில் ஒன்றையும் செய்து வருகின்றனர்.

### பூசகர் வரலாறு :

வைரவப் பெருமானின் அருட்கருணை பெற்ற அக்காலத்து அன்பர்கள் வைரவரைப் பூசிப்பதற்காக வீரசைவகுலத்துப் பூசகரை நியமித்தனர். கோயிலுக்குப் பூசை செய்ய நேர்ந்ததால் பூசகர் குடும்பத்தினர் கோயிலுக்கு முன்னுள்ள காணியிற் குடியேறினர். சூலத்தில் எழுந்தருளிய ஞானவைரவப் பெருமானை முதன்முதலிற் பூசிக்கும் பேற்றினைப் பெற்றவர் அனந்தர் என்னும் நாமத்தை உடைய பூசகர் ஆவர். அவரது காலத்தின்பின் அவரது மகன் கந்தவனம் என்பவர் பூசகராக விளங்கினர். இவரது சகோதரர் ஒருவர் ரங்கூன் நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டு பெருந் தனவந்தரானதால் 'ரங்கூன்' என்ற அடைமொழியினால் அழைக்கப்பட்டார். கந்தவன ஐயரின் மூத்த மகளாகிய முத்துப்பிள்ளை என்பவரின் இரண்டாவது புத்திரராகிய ஐயாத்துரை ஐயர் கந்தவன ஐயரின்பின் பூசைசெய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். கந்தவன ஐயரின் இரண்டாவது மகளின் புத்திரராகிய சுப்பிரமணிய (தம்பிரான்) ஐயர் ...க் காலத்தில் சடச்சப்பைப் பகுதியில் எழுந்தருளியுள்ள வைரவப் பெருமானுக்குப் பூசை செய்துவந்தார். தம்பிரான் ஐயரின் தந்தையின் பெயர் கந்தவனம். தம்பிரான் ஐயரின் குடும்பத்தினர் சடச்சப்பை ஆலயத்துப் பூசைப் பொறுப்பைக் கவனித்து வந்தாலும் அவர்கள் கிளானை வைரவரின் தர்மச் சொத்துக் காணியிலேயே வாழ்ந்து வந்தனர். ஐயாத்துரை ஐயர் கிளானையை விடுத்து வேறூரில் குடியேற நேர்ந்ததால் தர்ம சொத்து அளித்தவர்களின் நிபந்தனைக்கு அமைய எமது ஆலய தர்மசொத்தில் வாழ்ந்துவந்த தம்பிரான் ஐயருக்கு எமது ஆலயத்திலும் பூசைசெய்யும் வாய்ப்புக் கிட்டியது.

தம்பிரான் ஐயர் பூசகராக இருந்தகாலம் எமது ஆலய வரலாற்றில் மிகவுஞ் சிறப்பு வாய்ந்த காலமாகும். அவரும் அவரது தர்ம பத்தினியான சிவக்கொழுந்து அம்மாவும் வைரவப் பெருமான்மீது மிகுந்த பக்தி கொண்டவர்கள். அழகிய தோற்றமுடைய ஆசாரசீலராகிய அவரைக் காண்பவர்கள் யாவரும் வைரவப்பெருமானைத் தரிசித்தது போன்ற நிறைவெய்துவர். இப்போதுள்ளது போல் அவரது காலத்தில் பூசகருக்கு வேதனம் ஒன்றும் வழங்கப்படவில்லை; இருந்தும் வைரவர் கடாட்சத்தினால் அவர் வாழ்க்கையில் முன்னேறியதுடன் வைரவப் பெருமானை வணங்குவோரையும் உயர்வடையச் செய்தார். அவர் மந்திரித்துக் குழந்தைகளுக்கு விபூதி அணிவாராயின் தீராத நோயுந் தீரும்.

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் பூசை செய்து வந்த தம்பிரான் ஐயர் தமது தள்ளாமையின் காரணமாகப் பூசைசெய்ய இயலாத நிலை ஏற்பட்டபொழுது, கிளானை வாழ் மக்கள் யாவரும் 11 – 04 – 79 அன்று ஒன்று கூடி ஆலயத்தைப் பரிபாலிப்பதற்கென ஒரு நிர்வாக சபையைத் தெரிவு செய்ததுடன் மகப்பேறு இல்லாத தம்பிரான் ஐயர் அவர்களுடன் வாழ்ந்துவந்த ஐயரின் பெருமகள் (ஐயம்பிள்ளைக் குருக்களின் மகள்) ஆகிய விமலாதேவியின் கணவர் செல்வரத்தின ஐயரைப் பூசகராக நியமித்தனர். செல்வரத்தின ஐயரே தற்பொழுதும் பூசகராக விருந்து ஆலயத்தைப் புனிதமாகப் பேணி வருகிறார்.

### முதலாவது கும்பாபிஷேகம் :

வைரவப் பெருமான்மீது மிகுந்த பக்தி கொண்ட ஆசாரசீலராகிய சங்கரப்பிள்ளை சின்னத்தம்பி (சாணைபர்) என்பவர் கொன்றை மரத்தின்கீழ் சிறு பந்தலில் எழுந்தருளியிருந்த வைரவப் பெருமானுக்கு மண்டபம் அமைக்க விரும்பினர். 1944 ஆம் ஆண்டளவில் அப்போது நகுலேஸ்வர ஆலய ஆதீனமாக விளங்கிய குமாரசுவாமிக் குருக்களைக்கொண்டு ஆலய நிர்மாணத்துக்கான நிலம் வகுக்கப்பட்டது. தற்போதுள்ள மூலஸ்தாபன மண்டபத்தையும் அதன் முன்னுள்ள மண்டபத்தையும் முன்னின்று

கட்டுவித்தார் மண்டபம் நிறைவுற்றதும் நடைபெற்ற கும்பாபிஷேகத்துடன் அலங்கார பூசைகள் ஆரம்பமாகி சுவாமி வீதி வலம் வரும் வைபவமும் இடம்பெறத் தொடங்கியதனால் சின்னத்தம்பி குடும்பத்தினர் அலங்காரத் திருவிழாக்களை ஆரம்பிக்கும் முகத் திருவிழாவைத் தற்பொழுதும் செய்து வருகின்றனர். தம்பிரான் ஐயர் பூசகராக இருந்த இந்த முதலாவது கும்பாபிஷேகத்தைச் சைவக் குருக்களாகிய சோமாஸ்கந்தரவர்கள் சிறப்பாகச் செய்து வைத்தார்கள்.

மண்டபம் அமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது திருமஞ்சனக் கிணறு அமைக்கும் பணியை சின்னவி வேலுப்பிள்ளை, வயிரவி வல்லிபுரம், சின்னப்பொடி முருகர் ஆகியோரும் அவர்களது சுற்றத்தவர்களும் மேற்கொண்டனர். அவர்களது முயற்சி கைகூடியது. அமிர்தம் போன்ற தீர்த்தத்தையுடையது எமது திருமஞ்சனக் கிணறு ஆகும். பொது மக்களுக்கென ஒரு கிணறு அமைக்கப்படாததனால் வழிபடவரும் அடியார்கள் திருமஞ்சனக் கிணற்றையே தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தி வந்தனர். தம்பிரான் ஐயர் கோயிற் புனிதத்தை மிகவும் போற்றுபவர். தீர்த்தம் எடுக்கும் திருமஞ்சனக் கிணறு புனிதம் இழப்பதை விரும்பாத அப்புண்ணிய சீலர் பொது மக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஆலயத்துக்கு முன்பாக ஒரு கிணறு அமைக்க வேண்டுமென விரும்பினார். அவர்களின் வேண்டுகோளிற்கிணங்கப் பொது மக்கள் வழங்கிய பொருளுதவியைக் கொண்டு கோயிலின் தென்கிழக்கு மூலையில் ஒரு கிணற்றை அமைப்பித்தார்.

## இரண்டாவது கும்பாபிஷகம்

வைரவப் பெருமானைச் சூலத்தில் வழிபட்ட அடியார்கள் அவரை விக்கிரக ரூபத்தில் கண்டுவழிபடவேண்டுமென அவாவுற்றனர். அதுவரைகாலமும் மூலஸ்தானத்தில் இருந்த சூலத்திற்குப் பதிலாக அழகிய திருவுருவத்தை உடையதும் ஜெகஜ்ஜோதியாகத் திகழ்வதுமான தற்போது உள்ள திருவுருவம் பிரதிட்டை செய்யப்பட்டது.

முதலாவது கும்பாபிஷேகம் நிகழ்ந்து பன்னிரண்டு ஆண்டுகளின்பின் திருவுருவில் எழுந்தருளிய வைரவப் பெருமானுக்கு அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. முன்னைய கும்பாபிஷேகத்தை செய்வித்த சங்கரப்பிள்ளை சின்னத்தம்பியின் புதல்வர்களான சங்கரப்பிள்ளை, கந்தையா, சரவணமுத்து ஆகியோர் கும்பாபிஷேகத்தை செய்வித்தார்கள்.

## மூன்றாவது கும்பாபிஷகம்

வைரவப் பெருமானின் திருவருட் கடாட்சம் கிட்டியதால் எம்மூரவர்கள் அனைவரும் வசதியான வாழ்க்கை வாழும் பேற்றினைப் பெற்றனர். வைரவப்பெருமானை வணங்கிவரும் அடியார்களின் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வந்தது. பக்தர்கள் நின்று வழிபடுவதற்கு மண்டபம் போதாமல் இருந்தது. ஊர்மக்கள் வைரவப்பெருமானுக்கு மண்டபம் அமைத்துக் கும்பாபிஷேகம் செய்யவிரும்பினர். வைரவப்பெருமானுக்குத் தனது உடல் பொருள் அனைத்தையும் அர்ப்பணிக்கக்கூடிய ஆசாரசீலராகிய சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை என்ற பெரியாரின் தூண்டுதலால் உந்தப்பட்ட ஊர்மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பொருள் உதவி அளித்ததுடன் சரீர உதவியும் நல்கி அமைக்கப்பட்டதே தற்பொழுதுள் விசாலமான முன் மண்டபம் ஆகும். எழுந்தருளி மண்டபத்தை இளையவர் சங்கரப்பிள்ளை (கிளாக்கர்) அமைத்து மண்டபத்தை மேலும் பொலிவுறச் செய்தார். மணிக்கோபுரத்தை கந்தையா சின்னத்துரை (நுவரெலியா) என்பவர் அமைத்து ஆலயத்திற்கு வரமுடியாத வைரவ பக்தர்களும் வைரவப் பெருமானை ஒலிவடிவில் வழிபடுவதற்கு வாய்ப்பளித்தார். காளிதேவிக்கென பொதுமக்களால் அமைக்கப்பட்ட ஆலயத்தில் காளிதேவியின் விக்கிரகத்தை அமைத்துப் பிரதிட்டை செய்தவர் சங்கரப்பிள்ளை திருநடராசா ஆவர். அதுவரை காலமும் மூலஸ்தானம் மூடுசாந்தாகவே விளங்கியது. மூலஸ்தானத்தைத் தூபி வடிவிற் காண விரும்பினர் பொதுமக்கள். தூபி அமைக்கும் பணியை வைத்திலிங்கம் சண்முகலிங்

கம் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டார். அத்திருப்பணி முடிவுற்றதும் சங்கரப்பிள்ளை சின்னத்தம்பியின் குடும்பத்தினரால் மூன்றாவது கும்பாபிஷேகம் செய்யப்பட்டு முழுமண்டபமாக அலங்கார உற்சவங்கள் நடைபெற்றன. கீரிமலை சிவஸ்ரீ ஜயம்பிள்ளைக்குருக்கள் மூன்றாவது கும்பாபிஷேகத்தைச் சிறப்பாகச் செய்து வைத்தார்.

## நான்காவது கும்பாபிஷேகம் :

நான்காவது கும்பாபிஷேகம் நடைபெற்று முழுமண்டலமாக அலங்காரத் திருவிழாக்கள் வெகு சிறப்பாக நிகழ்ந்து முடிவடைந்துள்ளன. வைரவப் பெருமான்மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டு வழிபட்டு வருவதால் உயர்நிலை அடைந்தவர் அன்பர் வயித்திலிங்கம் சண்முகலிங்கம் ஆவர். விநாயகருக்கு ஓராலயம் அமைக்க வேண்டுமென அவர் விரும்பினார். அத்திருப்பணியை மிகவுங் குறுகிய காலத்தில் நிறைவேற்றியவர். அத்துடன் நிற்காது வைரவப் பெருமானுக்குப் பலிபீடம் அமைத்ததுடன் மூலஸ்தானத்திலும் 'மாபிள்கல்' பதிக்கும் பணியை மேற்கொண்டு நிறைவேற்றினார். அந்நிகழ்வான் நடைபெற்றதே நான்காவது கும்பாபிஷேகமாகும். கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக வயித்திலிங்கம் சண்முகலிங்கமவர்களால் செய்யப்பட்டு முழுமண்டலமாக அலங்காரத் திருவிழாக்கள் இடம்பெற்று மண்டலாபிஷேகமும் கும்பாபிஷேகம் செய்தவராலேயே செய்யப்பட்டுள்ளது. நான்காவது கும்பாபிஷேகம் நிகழ்ந்து அலங்காரத் திருவிழாக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த நடுப்பகுதியில், பரிபாலனசபைச் செயலாளர் ச. நகுலேஸ்வரனும் பொருளாளர் வ. மருதையாவும் கும்பாபிஷேக மலர் வெளியிட வேண்டுமென விரும்பியதால் மலர்ந்ததே இக் கும்பாபிஷேக மலராகும். நான்காவது கும்பாபிஷேகத்தின்போது குருக்களாக இருந்து வெகு சிறப்பாக அபிடேக ஆராதனைகள் செய்தவர் ஸ்ரீரேணுகாச்சிரமபட்டத்தரசு சிவஸ்ரீ இ- உருத்திரபுரநேஸ்வரக் குருக்கள் ஆவார்- எமது ஆலயத்துடன் மிகுந்ததொடர்புடைய சிவஸ்ரீ ஜயம்பிள்ளைக் குருக்களின் பேரனுமாவர் எமது ஆலய பூசகரின் உறவினருமாவர்.

## ஆலயத் திருப்பணி

ஞானவைரவப் பெருமான் ஆலயம் இவ்வளவிற்கு வளர்ச்சியடைவதற்குப் பெரியோர்கள் மனமுவந்து நல்கிய பொருளுதவி மட்டுமல்ல அவ்வக் காலங்களில் வாழ்ந்த வாழுகின்ற இளைஞர்களின் சரீரத் தொண்டுதான் என்று கூறின் அது மிகையாகாது. எம்மூர் இளைஞர்கள் திருப்பணித் தொண்டாற்றுவதில் பெயர் பெற்றவர்கள். எமது ஆலயத்தில் மட்டுமல்ல அண்மையிலுள்ள கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், காங்கேசன்துறை ஞானநாதர்சுவாமி கோயில் ஆகிய தலங்களிலெல்லாம் காலத்திற்குக் காலம் திருப்பணித் தொண்டாற்றி அந்தணப் பெருமான்களின் அன்பையும் ஆசியையும் பெற்றவர்கள். எமது ஆலயத்தின் முன்மண்டபம் அமைக்கும்பணி ஆரம்பிக்கப்போகும் அக்காலத்தில் இளைஞர்களாகத் திகழ்ந்தவர்கள் இரவு பகலென்றும் பாராது கண் துஞ்சாது கருமமே சிரமேற்கொண்டு திருப்பணியை நிறைவேற்றியவர்கள் சீவாத பிளந்த பனைமரங்களைக் கீரிமலையிலிருந்து தோளிற் சுமந்து வந்த பெருமைக்குரியவர்கள். ஆலயத்திருப்பணிக்கு வேண்டிய கற்களைப் பகலில் பெயர்த்தும் வேண்டிய கடற்கரை மணலை இரவோடிரவாக அள்ளியும் கொண்டு வந்து சேர்த்தவர்கள் அவர்களே, அதுமட்டுமல்ல மண்டபம் கட்டும்போது உதவியாட்களாக நின்று மண்டபத்தை எழுப்பிய பெருமைக்குரியவர்கள் அவர்களே. ஆலயத்திருப்பணி முடியும்வரை வீடுவாசலை மறந்து சரியைத்தொண்டு செய்து திருவருட் கடாட்சத்தைப் பெற்றவர்கள் எம்மூர் இளைஞர்களாவர். ஊர் இளைஞர்கள் யாவரும் இத்தொண்டில் ஈடுபட்டிருந்தாலும் ஊக்கமுடன் பணியாற்றும் உடலுறுதியையும் மனவுறுதியையும் பெற்றவர்களின் தொண்டை நினைவு கூர்வது இம்மலருக்கு மணமூட்டும். கதிர்காமர் அருள்ராசா காசிப்பிள்ளை திருநாவுக்கரசு, வயித்திலிங்கம் சிவானந்தன், அமரர் கந்தப்பிள்ளை இராசரத்தினம் ஆகிய நால்வரும் ஒருவேலையை ஆரம்பித்தால அது நிறைவடையாது விலகமாட்டார்கள். எந்நேரம்

சென்றாலும் செய்து முடித்தே விலகும் மன வுறுதியையும் உடலுறுதியையும் கொண்டவர்களாக விளங்கினார்களாதலால் திருப்பணி வேலைகள் தங்கு தடையின்றி நடைபெற்றன. திருப்பணி வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் யாவரையும் இங்கு குறிப்பிடப்புகின் பலர் பெருகும் என்றாலும் சின்னத்தம்பி சுந்தரமூர்த்தி, அமரர் சின்னத்துரை காங்கேசன் ஆகியோர் ஆற்றிய தொண்டையுங் குறிப்பிடாதிருக்க முடியாது. காங்கேசனுடைய தந்தையாரிடம் வண்டில் மாடு இருந்ததால் மணல், கல் ஏற்ற வேண்டுமென்று சொன்னதுமே வண்டிலுடன் வந்து நிற்பார் காங்கேசன். பரிபாலன சபை உறுப்பினராக இருந்த போது அமரராக நேர்ந்தது ஆலயத் திருப்பணிக்கு நேர்ந்த இழப்பாகும். ஆலயத்தில் நடைபெற்ற பல திருப்பணித் தொண்டுகளின்போதும் சித்திரா பௌர்ணமி விசாகப் பொங்கல்போன்ற முக்கிய வைபவங்களின்போதும் சிறப்பாகத் தொண்டாற்றியவர்களில் ஒருவர் என்றும் இளைஞர்போல் செயற்படும் வைரவ பத்தராகிய சபாபதி குணரத்தினம் ஆவர். இவர் தொடர்ந்தும் தன்னாலியன்ற ஒத்துழைப்புக்களை நல்கிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பரிபாலனசபையினரின் முயற்சியாற் தற்பொழுது பூசகர் வதிவதற்கொரு சிறுமனை அமைக்கும் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முந்திய இளைஞர்களின் அடியொற்றி தற்பொழுதுள்ள இளைஞர்களும் திருப்பணி வேலையில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளார்கள். அவர்களுக்கு மனவுறுதியையும் உடலுறுதியையும் வைரப் பெருமான் அருள்வாராக.

**பரிபாலன சபை:-**

முன்பு குறிப்பிட்டுள்ளது போல் ஆலயத்தைப் பரிபாலிக்கும் பொறுப்பைப் 11-04-79 அன்று பரிபாலன சபை பொறுப்பெடுத்துக்கொண்டது. ஒருகுடும்பம் முன்னேறுவதற்கு மூத்தபிள்ளையின் வழிகாட்டல் காரணமாக விளங்குவதுபோல எமது பரிபாலன சபை கட்டுக்கோப்புடன் இயங்குவதற்கு வழிகாட்டியவர்கள் முதற் பரிபாலனசபை உறுப்பினர்களாகிய திருவாளர் மு நடராசா, மு. மார்க்கண்டு, க. துரைரத்தினம், ச. குணரத்தினம், ச. இருநடராசா, மா. நடராசா, சி நாகராசா ஆகிய எழுவரே என்று கூறின் சாலப்பொருந்தும் ஆண்டுதோறும் தமிழ் வருடப்பிறப்பன்று நடைபெறும் ஆண்டு நிறைவப் பொதுக் கூட்டத்திற் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் ஆலயத்தைப் பரிபாலிக்கும் பொறுப்பை மேற்கொண்டு வருகிறார்கள்; பரிபாலனத்திற்கெனச் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்ட போதும் பரிபாலன சபை ஆரம்பித்த காலத்திலிருந்தே சபைக் கட்டுக்கோப்புக்கு அமையாத வகையில் சிலர் செயற்பட்டு வருகிறார்கள். மனித குலத்தில் பலதரப்பட்டவர்கள் இருக்கிறார்கள் சிலர் எதிலும் நிறையைக் காணாது குறையை மட்டுங் காண்பவர்களாக இருக்கிறார்கள் ஆணவம் ஒடுங்க வேண்டிய ஆலயத்தில் ஆணவத்தை வளர்ப்பவர்களாக இருப்பார்கள் சிலர் இறைவனுக்காகத்தான் செய்கின்றோம் என்பதனை மறந்தவர்களாக இருப்பர் சிலர் இப்படிப் பல்வேறு தரப்பட்டவர்களாலும் பரிபாலன சபைக்கு ஏற்பட்ட பிரச்சனைகளையெல்லாம் புத்திசாதுரியமாகத் தவிர்ந்து சுமுகமாகச் செயற்பட்டு வருகிறது எமது ஆலய பரிபாலனசபை என்று கூறின் அது மிகையாகாது இப்பொழுது இருக்கும் பரிபாலனசபை பத்தாவது நிர்வாக சபையாகும். ஆலயநிர்வாகத்தைப் பரிபாலன சபை மேற்கொண்டதன்பின் பலவித ஆக்கபூர்வமான பணிகளில் மேற்கொண்டு நிறைவேற்றி வருவதால் கோயில் வளர்ச்சியுற்று வழிபடும் பக்தர்களின் தொகையும் அதிகரித்துள்ளது; பரிபாலனசபையின் நிர்வாகத்தின் போது பலர் உதவிகளை நல்கியுள்ளனர். கோயிலுக்கு அணித்தாக் வதியும் வயிரமுத்து சிவசுப்பிரமணியம் என்னும் அன்பர் வயிரவர்மீது மிகுந்த பக்தியும் அளப்பரிய நம்பிக்கையும் உடையவர்; அவர் ஆலயத்திற்கு மின்னொளி அமைத்து இறைவன் ஜகஸ்ஜோதியாகத் திகழ வழிவகுத்ததுடன் அதற்காக வேண்டிய செலவைத் தொடர்ந்தும் செலுத்தி வருகின்றார். அவரது குடும்பத்தினரால் குதிரை வாகனம் ஒன்று செய்து வைக்கப்பட்டுள்ளது. அதுவரை

காலமும் குருநாதர் குடும்பத்தினரால் செய்து வைக்கப்பட்ட நாய் வாகனம் ஒன்று மட்டுமே இருந்தது அன்பர் சின்னக்கண்டர் சந்திரபாலன் என்பவர் வைரவர்மீது மிகுந்த பக்தி கொண்டவர் வெளிநாட்டில் வாழும் அவ்வன்பர் ஆலயத்திற்கென ஓர் ஒலி பெருக்கிக் கருவியும் சுவர்க்கடிகாரம் ஒன்றும் அன்பளிப்புச் செய்துள்ளார். கடல் கடந்த நாடுகளில் வாழும் எம்மூர் அன்பர்களின் உதவிகளைப் பெற்று ஊரவர்களின் உதவியுடன் அன்னதான மண்டபம் ஒன்றை அமைக்க முன்வந்த பரிபாலனசபை அன்பர் சண்முகலிங்கம் தனது சொந்தச்செலவில் அன்னதான மண்டபம் அமைக்க முன்வந்ததைக் கண்டு அப்பணியை விடுத்துக்கோயிற் பிரகாரத்தைச் சுற்றிவர மதிலமைக்கும் பணியை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளது. அடுத்த பணியாக மடப்பள்ளி அமைக்க முனைந்த பரிபாலனசபை கோயில் பூசகரின் வீடு சீர்கெட்ட நிலையிலிருப்பதைக் கண்டு மடப்பள்ளி அமைக்கும் பணியைப் பிற்போட்டு பூசகர் வதிவதற்கேற்ற சிறிய மனையொன்றைத் தர்மசொத்து நிலத்தில் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றது. ஊர்ப்பிரமுகர்கள் இப்பணிக்கு பொருளுதவி நல்கியதுடன் தேவை ஏற்படின் மீண்டும் நல்குவதற்குச் சித்தமாக உள்ளார்கள் இளைஞர்களும் இப்பணியில் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளார்கள். மடப்பள்ளித் திருப்பணியும் அன்னதான மண்டபம் அமைக்கும் பணியும் நிறைவேற வைரவரின் திருவுளங் கூடுவதாக.

பரிபாலனசபையின் நிர்வாகத்தின்கீழ் பூசை முறையிற் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தினமும் ஒரு காலப்பூசையாக விளங்கிய ஆலயத்தில் தற்பொழுது மூன்றி காலப் பூசைகள் தவறாது நடைபெற்று வருகின்றன. வாரந்தோறும் வெள்ளிக்கிழமை இரவு ஓதுவார்மூர்த்தி திரு. சி. தெய்வேந்திரம் அவர்களின் பண்ணிசையுடன் ஊரிளைஞர்களும் சேர்ந்து பாடும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்ச்சி இடம் பெறுகின்றது. ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு அன்பர் இதற்காக வேண்டிய பொருளுதவியை நல்கி வருகின்றார். நைமித்திய பூசைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. முன்பு நடைமுறையிலிருந்த அலங்கார உற்சவங்கள், திருவெம்பாவை, நவராத்திரி பூசைகளுடன் தைப்பொங்கல், தைப்பூசம், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், வருடப்பிறப்பு ஆனி உத்தரம், திருக்கார்த்திகை ஆகியன விசேட பூசைகளாக இடம்பெற்றுள்ளன. நூற்றியிருபத்தைந்துக்கு மேற்பட்ட அன்பர்கள் தமது நட்சத்திரத்தின் மீது மாதந்தோறும் செய்யும் காம்ய பூசையும் இடம் பெறுகின்றது. ப்பூசை செய்வதற்காக வருடமொன்றுக்கு அறுபது ரூபா செலுத்திவந்த அன்பர்கள் இவ்வாண்டிலிருந்து எழுபத்தைத்து ரூபா செலுத்த முன்வந்தது பாராட்டிற்குரியது.

ஆலயம் அமைந்திருக்கும் காணியை வழங்கிய வம்சத்தில் வந்துதித்த திரு. ஆ. காசிநாத உபாத்தியார் அவர்களும் தற்பொழுது எமது கிராமத்தில் வாழ்பவர்களில் முதியவர்களாகத் திகழும் திரு. கதிரிப்பிள்ளை தம்பையா, திரு. வயிரவி வல்லிபுரம் அவர்களும் பரிபாலனசபைச் செயலார் திரு. சங்கரப்பிள்ளை நகுலேஸ்வரன் அவர்களும் ஞானவைரவர் ஆலய வரலாற்றினை எழுதுவதற்கு வேண்டிய தகவல்களைத் தந்துதவியுள்ளார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க. துரைரத்தினம்
ஆசிரியர்

எல்லாம் வல்ல பைரவக் கடவுளின் கடாட்சத்தை
வேண்டுகிறோம்.

****************************************

# SRI BAIRAVAN WORKS

## BOILERS & MECHANICAL ENGINEERS

****************************************

நெல் ஆலைகளுக்கான நீராவிக் கொதி கலன்கள்
நீராவித் தொட்டிகள்
பொருத்துதல், சீரமைத்தல்

மற்றும்

வியாபார நிறுவனங்களுக்கான சுருக்குக் கேற்,
வீடுகளுக்கான கேற், கிறில்
உருக்குத் தளபாடங்கள் செய்வதற்கும்
சிறந்த ஸ்தாபனம்

# ஸ்ரீ பைரவன் வேக்ஸ்

(மகாஜனக் கல்லூரி முன்பாக)

துரையப்பாபிள்ளை வீதி,
அம்பனை, தெல்லிப்பழை.

மாவை - கிளானை ஞானவைரவப் பெருமான்
அருளினை வேண்டுகின்றோம்.

# T. M. P. C. S.

தலைவர், இயக்குனர்சபை,
பணியாளர்கள்

# தெல். பல நோ. கூ. சங்கம்

தெல்லிப்பழை

மாவை - இளானை ஞான வைரவப் பெருமான்
அருளினை வேண்டுகின்றோம்.

# THIRUPATHY TEXTILES



நங்கையர் விரும்பும் நவநாகரிகமான
புடவைத் தினிசுகளுக்கும்
கூறைச்சேலை வகைகள்
கைத்தறிப்
புடைவைகளுக்கும்
புகழ்பெற்ற ஸ்தாபனம்

# திருப்பதி
# ரெக்ஸ்ரைல்ஸ்

33, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

அம்பிகா அச்சகம், குரும்பசிட்டி.